பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 14 புதன்கிழமை (28.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 212

# ராஜீவ் கொலைக்கு புலிகள் வருத்தம்!

## தொலைக் காட்சிப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

புதுடில்லி, ஜூன் 28

ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் ஒரு பெரிய துன்பியல் நிகழ்வு, வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு (Monumental Tragedy). அதற்காக நாம் வருந்துகின்றோம்.

இந்த கடந்தகால சம்பவங்களை மறந்து விடயங்களைத் தாராள மனப்பான்மையோடு புதிய வடிவத்தில் அணுகுமாறு இந்திய அரசையும் இந்திய மக்களையும் நாம் வேண்டுகின்றோம்.

இப்படித் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

இந்தியாவின் 'என்.டி.ரி.வி.' தொலைக்காட்சி நிறுவனத்துக்கு லண்டனில் வைத்து வழங்கிய செவ்வி ஒன்றிலேயே ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பான இந்த விளக்கத்தை அளித்திருக்கின்றார் பாலசிங்கம்.

அன்ரன் பாலசிங்கம் தனது பேட்டியில் தெரிவித்தவையாவது:-

அந்தச் சம்பவம் (ராஜீவ் கொலைச் சம்பவம்) ஒரு பெரிய துன்பியல் நிகழ்வு. வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு (**Monumental Tragedy**).

(14ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலையை மறக்கவோ புலிகளை மன்னிக்கவோ முடியாது

### இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 28

''ராஜீவ் கொலைச் சம்பவத்தை மறக்கவோ, அதற்காக புலிகளை மன்னிக்கவோ இந்திய மக்கள் தயாராக இல்லை''

- இப்படி இந்திய இணை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார் என என்.டி.ரி.வி. செய்தி நிறுவனம் நேற்று அறிவித்தது.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியின் சில பகுதிகளை தனது அறிவிப்புக் கருத்துகளோடு ஒளிபரப்பிய அந்தச் செய்தி நிறுவனம் அதைத் தொடர்ந்து இந்திய இணை அமைச்சர் ஆனந்த் சர்மா இவ்விடயம் குறித்து வெளியிட்ட கருத்துக்களைப் பேட்டியாக வெளியிட்டது.

அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துத் தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆனந்த் சர்மாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

**கேள்வி:-** ராஜீவ் காந்தி கொலைக்குப் புலிகளே பொறுப்பு என்பதை எல்லோரும் அறிந்திருந்தாலும் எப்போதும் புலிகள் இப்போது போல அதை ஏற்றுக்கொண்டு மறந்துவிடுமாறு கோரியது கிடையாது. ஆகவே, இந்திய மக்களும் இந்திய அரசும் இந்தக் கட்டத்தில் அப்படி நடந்து கொள்ளமுடியுமா?

**பதில்:-** புலிகளின் பேச்சாளரின் அறிவிப்பு அவர்கள் பக்கத்தில் ராஜீவ் கொலையில் அவர்களின் சிக்கல் நிலை பற்றிய ஒப்புதல் வாக்குமூலம்தான். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வதிரி மேற்கில் நேற்று முன்னிரவு வீடுவீடாகத் தேடுதல்

கரவெட்டி, ஜூன்28

வடமராட்சி வதிரி பகுதியில் நேற்று முன்னிரவு படையினர் திடீர் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தினர். நேற்று மாலை 5.45மணியளவில் வாகனங்களிலும் கால்நடையாகவும் அப்பகுதிக்கு வந்த படையினர் வதிரி மேற்கு பகுதியை திடீரென சுற்றிவளைத்தனர்.

வதிரி போமேர்ஸ் விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டத்தில் பங்குபற்றியிருந்த

(13ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் தாக்குதல் போராளி ஒருவர் வீரச்சாவு

மட்டக்களப்பு, வாகரையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக் காலை படையினரும், ஒட்டுக்குழுவினரும் இணைந்து நடத்திய கிளைமோர் தாக்குதலில் புலிப் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

வாகரை - கிரிமிச்சைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் இராணுவம் மற்றும் ஒட்டுக்குழுவைச் சேர்ந்த சுமார் 15 பேர் ஊடுருவி இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்

(13ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டி திட்டமிட்டு திரிபுபடுத்தப்பட்டது!

கொழும்பு, ஜூன் 28

என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டி இந்தியத் தரப்பினால் திட்டமிட்டுத் திரிவுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மதியுரைஞர் பாலசிங்கம் தெரிவித்த கருத்துகளை முழுமையாகப் பயன்படுத்தாமல், ஒரு பகுதியை ஒளிபரப்பி அதற்கு வேறு அர்த்தத்தில் விளக்கமும், வியாக்கியானமும் கொடுத்து இந்தியத் தரப்பில் 'திருவிளையாடல்' புரியப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மேற்படி பேட்டி என்.டி.ரி.வியின் சார்பில் ஜேர்மன் நாட்டில் பணியாற்றும் இந்தியப் பெண் ஒருவரினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டன் புறநகர் பகுதியிலுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டில் எடுக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டு முற்பகுதியில் கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த சமயம், ''ராஜீவ் காந்தி கொலை ஒரு துன்பியல் நிகழ்வு'' - என்று புலிகளின் தலைவர்

(14ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி அஞ்சலி

## படைத்தளபதி குலதுங்கவின் இறுதிக் கிரியை இன்று

பன்னிப்பிட்டியவில் நேற்று முன்தினம் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மூத்த இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் இறுதிக்கிரியைகள் பொரளையிலுள்ள கனத்தை மயானத்தில் இன்று நடைபெறவிருக்கின்றன. அவரது உடல் களனி வரகொடவில் உள்ள அவரின் சகோதரரின் இல்லத்தில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

(13ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆவது நாளாக பணிப்புறக்கணிப்பு பல இடங்களில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

அரச அலுவலகங்களும், நிர்வாகப் பணிகளும் இரண்டாவது நாளாக நேற்றும் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன.

இதேவேளை, குடாநாட்டின் பல இடங்களிலும் பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இத்தேடுதல் நடவடிக்கைகளில் வீடு வீடாகச்சென்ற படையினர் வீட்டிலிருப்பவர்

(13ஆம் பக்கம் பார்க்க)

## பாரமி குலதுங்கவின் இடத்துக்கு சாமன் குலதுங்க நியமனம்

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் இடத்திற்கு இலங்கை இராணுவத்தின் தொண்டர் படைத் தளபதி மேஜர் ஜெனரல் டி.வி. எஸ்.வை.சாமன் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர் படைத் தளபதி கடமைகளுக்கு மேலதிகமாக இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரிக்கான கடமையையும் ஆற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேஜர் ஜெனரல் டி.வி.எஸ்.வை. குலதுங்க 1973ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி தன்னை இராணுவத்தில் இணைத்துக்கொண்

(13ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஐ.நா. தலைமையீட்டுக்கு இப்போதைக்கு இடம் ஏதும் இல்லை

### அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் எண்ணமோ, திட்டமோ ஐக்கிய நாடுகள் சபைக்கு இல்லை.

இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானே இலங்கை அமைச்சர் ஒருவருக்கு நேரில் தெரிவித்திருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த இடர் முகா மைத்துவ, மனிதவள மேம்பாடுகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடந்த வாரம் ஜெனீவாவில் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானை சந்தித்தார். அப்போதே அவரிடம் ஐ.நா. செயலாளர் நாயகம் மேற்படி கருத்தைத் தெரிவித்தார் என அறியவந்தது.

இனமோதல்களின் [illegible] வரும் இலங்கையின் நிலைவரம் குறித்து நேரடியாக நிலைமைகளை ஆராய்ந்து, தகவல் சேகரித்து, அறிக்கை தருவதற்காக தமது விசேட பிரதிநிதி ஒருவரை ஐ.நா. செயலாளர் நாயகம் அண்மையில் கொழும்புக்கு அனுப்பியிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

மூத்த பெண் இராஜதந்திரியான இவர்

([illegible]ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் விவசாயிகளை காணோம்!

திருகோணமலை சேருநுவரப் பொலீஸ் பிரிவிலுள்ள கிளிவெட்டி, பாரதிபுரத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் விவசாயிகள் நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் திருமலையிலுள்ள அதியமான் கேணி என்ற பகுதிக்குள் தங்களின் மந்தைகளைத் தேடிச் சென்ற வேளையிலேயே காணா

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



பணிப்புறக்கணிப்பின் இரண்டாவது நாளான நேற்று யாழ். மாவட்ட செயலகம், வங்கி அலுவலகம், பாடசாலை என்பன வெறிச்சோடிக் காணப்படுவதைப் படங்களில் காணலாம்.

# தாழப் பறந்து தாக்கும் விமானங்களை கண்டறியும் ராடர் இந்தியா வழங்கியது

புதுடில்லி, ஜூன்28

சுமார் ஆறு வருட கால இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு இராணுவ ரீதியான உபகரணங்களை வழங்கும் பணியை இந்தியா மீண்டும் ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தாழப் பறந்து வந்து தாக்கக் கூடிய விமானங்களின் தாக்குதலை முன்கூட்டியே கண்டறியக் கூடிய இரண்டு இராணுவ ராடர்களை இந்தியா இலங்கைக்கு வழங்குகின்றது எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

விடுதலைப் புலிகள் வசம் சில இலகு ரக விமானங்கள் இருப்பது குறித்தும் தமது நிர்வாகப் பிரதேசத்தில் இரண்டு விமான ஓடுதளங்களை அவர்கள் அமைத்திருப்பது பற்றியும் தகவல்கள் வெளிவந்ததை அடுத்தே இந்த ராடர்களை இலங்கைக்கு வழங்குவது என்ற முடிவை இந்தியா எடுத்தது என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த ராடர்களை, தற்பாதுகாப்புக்கானவை. ஆனால், மோசமான ஆபத்துக்களை விளைவிக்காதவை என்ற வகைக்குள் அடங்கும் இராணுவ உபகரணங்களை - அயல் நாட்டுக்கு வழங்கி உதவும் திட்டத்தின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வருடம் டிசெம்பரில் இந்தியாவுக்கு விஜயம் செய்த சமயத்தில் இந்த ராடர்களை வழங்குவது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடைசியாக இந்தியா 2000 ஆம் ஆண்டு இலங்கைக்கு அதிவேகப் பீரங்கிப் படகு ஒன்றை வழங்கி இருந்தது.

அண்மையில் அயல்நாட்டுக்கு உதவும் திட்டத்தின்கீழ் மாலைதீவு நாட்டுக்கு ஒரு ரோந்துப் படகை இந்தியா வழங்கி உதவியது.

மியான்மார், மொறீஸியஸ் போன்ற நாடுகளுக்கும் இது போன்ற உதவிகளை இந்தியா வழங்கி உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## பண்டிதர் நடராஜா காலமானார்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், தமிழ்நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் கா.செ.நடராஜா (வயது - 75) நேற்று தமிழகத்தில் காலமானார்.

ஓய்வுபெற்ற கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியரான இவர் 'தமிழா விழித்தெழு!', 'இளங்கோவின் கனவு', 'இணுவையூர் அப்பர்', முதலான பல நூல்களை எழுதியவர்.

இந்து கலாசார அமைச்சின் கீழ் இந்து கலாசாரத் திணைக்களத்தின் நூல் வெளியீட்டுக் குழுவில் கடமையாற்றிய இவர் 'தக்ஷண கைலாய மான்மியம்' என்ற நூலையும் தொகுத்தவராவார்.

இவர் எழுதிய 'தமிழா விழித்தெழு' என்ற நூலின் காரணமாக 1958களில் அன்றைய அரசினால் எச்சரிக்கப்பட்டவர்.

'சூரியன் எவ்.எம்.' வானொலியின் செய்தி ஆசிரியரான குருபரனின் தந்தை இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வத்தளையில் இந்துமத எதிர்ப்பு ; மனோகணேசன் எம்.பி. கண்டனம்

வத்தளைப் பகுதியிலிருந்து மத பூஜை வழிபாடுகளை நிறுத்தும்படி கோரி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பாக மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக மனோகணேசன் எம்.பி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வத்தளை தேவாலய வீதியில் நடைபெற்று வந்த இந்து மத நடவடிக்கைகளை உடன் நிறுத்திவிட்டு ஆலயத்தை மூடும்படி ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தை வத்தளையின் பிரதான கத்தோலிக்க மதகுரு ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நகர சபை உறுப்பினர் ஒருவரும், அப்பகுதியைச் சேர்ந்த இனவாதிகள் பலரும் சேர்ந்து நடத்தியுள்ளனர்.

இப்பகுதியில் தமிழர்களுக்கு இந்துமதம் தேவையில்லை. எனவே, உடனடியாக இந்து மத நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். தவறினால் விடுதலைப் புலிகள் என்று பட்டம் சூட்டப்படுவீர்கள் என்று பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் சம்பந்தமாக பொலீஸ் விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளேன். சம்பந்தப்பட்ட மதகுருமீது நடவடிக்கை எடுக்கும்படி பேராயரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சியின் வத்தளை அமைப்பாளர் ஜோன் அமரதுங்க எம்.பி. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஐ.தே.க. நகரசபை உறுப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியளித்துள்ளார். வத்தளை நகர சபை அமைப்பாளர் சுரேஷ் கங்காதரனிடம் இச்சம்பவம் தொடர்பில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

வத்தளை பிரதேசத்தில் சிங்கள - கத்தோலிக்க மதகுருமார்கள் தொடர்ந்தும் கத்தோலிக்க மதத்தை வளர்ப்பதைவிட சிங்கள பேரினவாதத்தை வளர்ப்பதிலேயே கூடிய அக்கறை செலுத்திவருகின்றனர். எந்த ஒரு மதத்தையும் பேணுவதற்கும்,மத நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கும் எவருக்கும் மத சுதந்திரம் இருக்கின்றது. இதை எவரும் தடுக்க முடியாது. இந்நிலையில் மத நல்லிணக்கத்தை வளர்க்கவேண்டிய மதகுருமார்கள் மத குரோதத்தையும், இனக்குரோதத்தையும் வளர்ப்பது கண்டிக்கத்தக்கது.

இவர்களது இந்தச் சிங்கள கத்தோலிக்கத் துவேசமே வத்தளையில் இயங்கும் தமிழ் பாடசாலை வளர்ச்சியைத் தடுத்துவருகிறது. தமிழ் மக்களின் வாக்குகளை மட்டும் தவறாமல் பெற்றுக்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நகரசபை உறுப்பினர் நடவடிக்கை பாரதூரமானதாகும்.

- என்று குறிப்பிட்டுள்ளார். (க)

# புலிகள் இயக்கத்திலிருந்து 46 சிறார்கள் விடுவிப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தனர் எனக் கூறப்படும் 46 சிறுவர்களை அவர்களின் நன்மைகருதி புலிகள் விடுவித்துள்ளனர். இவர்களில் 22 பேர் அவர்களது பெற்றோரிடமும், 24 பேர் கிளிநொச்சியிலுள்ள கல்வி அபிவிருத்தி நிலையத்திலும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இவர்கள் 2005 மே மாதம் முதல் 2006 மே மாதம் வரையான காலப் பகுதியில் இயக்கத்தில் இணைந்தனர். இவர்களில் முதற்கட்டமாக 2006 மே மாதம் 6 ஆம் திகதி ஒரு குறிப்பிட்ட தொகையினரும், ஜூன் மாதம் 3ஆம் திகதி இரண்டாம் கட்டமாக ஒரு குறிப்பிட்ட தொகையினரும் விடுவிக்கப்பட்டனர் எனத்தெரிவிக்கும் புலிகளின் சமாதானச் செயலகம், இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களின் விவரம் அடங்கிய பட்டியல் ஒன்றை 'யுனிசெவ்' நிறுவனத்திடமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரிடமும் கையளித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளது. (க)

# திருமலை அன்புவழிபுரத்தில் இளைஞனின் சடலம் மீட்பு

திருகோணமலை அன்புவழிபுரத்துக்குச் சமீபமாக பாரதிபுரம் மயானத்துக்கு அருகில் சூடு மற்றும் வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. அன்புவழிபுரப் பகுதியில் உள்ள மக்கள் சிலர் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களிலுள்ள தமது உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்தனர் என்று தகவல்கள் தெரிவித்தன. (க)

# கல்முனையில் உண்ணாவிரதம் இருந்தோரில் இருவர் சுகயீனம்

காரைதீவு, ஜூன்28

கல்முனையில் உண்ணாவிரதமிருந்த தொண்டராசிரியர்களுள் இருவர் நோய்வாய்ப்பட்டு கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத் தொண்டராசியர் சங்கச் செயலாளர் அஷ்ரப்கான் மற்றும் உறுப்பினர் ரி.ராஜேந்திரன் ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை எட்டாவது நாளாக கல்முனை வலயக் கல்விப் பணிமனை முன் உண்ணாவிரதம் தொடர்ந்தது. இதனால், வலயக்கல்விப் பணிமனை தொடர்ந்து மூடப்பட்டுள்ளது. கல்வி அலுவல்களும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனிடையே கடந்த புதன் முதல் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிமனை முன் இடம்பெற்ற உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டம் என்பன கைவிடப்பட்டு அனைவரும் நேற்றுமுதல் கல்முனையில் ஒன்றுகூடி சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இருவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அதேசமயம் மேலும் மூவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு நிரந்தர நியமனம் கோரி எட்டு நாள்களாக கல்முனையில் இடம்பெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டம் பற்றி இதுவரை வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு எட்டி[illegible] தொண்டர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க)

## கந்தபுராண படனம் பூர்த்திவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்28

அகில இலங்கை அப்பர் சுவாமிகள் அருள் ஒளி மன்றத்தின் ஏற்பாட்டில் கந்தபுராண படனம் பூர்த்திவிழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் தேரடியில் நடைபெறவுள்ளது.

மன்ற இயக்குநர் மருகமுருகேசு தலைமையில் காலை முதல், புராண படனம் இடம்பெற்று விசேட பூசை ஆராதனைகள் இடம்பெறும்.

நல்லூர் தேரடியில் கடந்த 6 மாதகாலமாக கந்தபுராண படனம் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (204)

# தபால் பொதிகளை திருடியவர் சிக்கினார்

கொழும்பு, ஜூன் 28

தபால் பொதிகளை களவாடி அதிலுள்ள பொருள்களைத் திருடி வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க வர்த்தக வலயத்தைச் சேர்ந்த தபால் நிலைய அதிகாரி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வழமைபோல் தபால் பொதி ஒன்றை இவர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும்போது பொலீஸார் இவரை கையும்மெய்யுமாக பிடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து இவரது வீட்டைச் சோதனை நடத்திய பொலீஸார் அங்கிருந்து காலி செய்யப்பட்ட பல தபால் பொதிகளை கண்டெடுத்தனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இத் திருட்டுச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வரும் பொலீஸார் இச்சம்பவத்துடன் வேறு எவருக்காவது தொடர்புகள் உள்ளனவா என்பதையும், இதுவரையில் இவ்வாறு திருடப்பட்ட பொருள்களின் முழுவிவரங்களைப் பெறுவதிலும் தீவிர விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# சந்தேகத்தில் கைதானவர்களை விடுவிக்க பிரதி அமைச்சர் ஏற்பாடு

கொழும்பு, ஜூன்28

தலைநகரில் தொழில்புரியும் மலையகத்தைச் சேர்ந்த, இளைஞர், யுவதிகளை சந்தேகத்தின் பேரில் கைதாவது அதிகரித்திருக்கும் நிலையில் இவ்விடயம் குறித்து அறிவதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ் அங்கு கைதாகியுள்ள மலையக இளைஞர், யுவதிகளைச் சந்தித்துப் பேசினார்.

என அவரது அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இவ்வாறு கைதாகியுள்ளவர்களை அவர் சந்தித்துப் பேசிய பின்னர் அவர்களது விடுதலை குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார். இதன் பிரகாரம் வெலிமடை மாவட்டத்தைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரிந்த யுவதிகள் மூவரும், கட்டட நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் இருவரையும் விடுதலைசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# குற்றம் சுமத்தும் அரசியல் போக்கு அமைதியை ஏற்படுத்த உதவாது

நேற்றுமுன்தினம் கொழும்பு, பன்னிப்பிட்டியவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இலங்கை இராணுவக் கட்டமைப்பின் அதியுயர்பீடத்தின் இரண்டாம் நிலையில் உள்ள மூத்த அதிகாரியான மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க உயிரிழந்திருக்கின்றார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தானாகவே காலமாகிக் கொண்டிருக்கிறது - செத்துக் கொண்டிருக்கின்றது - என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் தாங்கள் செய்யவில்லை என மறுத்துள்ள போதிலும், அப்பட்டமாக இது புலிகளின் வேலை என்பது தெளிவு என்றும், புலிகள் பயங்கரவாதத்தின் மீதான தமது பற்றுறுதியைக் கைவிடவில்லை என்பதற்கு இத்தாக்குதல் நல்லதோர் உதாரணம் என்றும் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இவ்வாறு குற்றம் சுமத்துவதாலோ அல்லது புலிகளுக்குப் பயங்கரவாதப் பட்டம் சூட்டுவதாலோ இப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

இத்தகைய சம்பவங்கள் வெடிப்பதற்கு மூல காரணமான இனப் பிரச்சினைக்கு - அதன் பெயரால் கடந்த அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பேரினவாத அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு - முடிவு காணும் திடசங்கற்பம் தென்னிலங்கை அரசுத் தலைமைக்கு ஏற்படும்வரை இப்படிப் 'பங்கரவாதம்' குறித்துக் குறை கூறிப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

இராணுவ அதிகாரி மீது - அவரது உயிருக்கு உலை வைக்கும் விதத்தில் - நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை 'பயங்கரவாதம்' என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மாறான யுத்தநிறுத்த மீறல் என்றும் குறைகூறும் அரசுத் தலைமை, சட்ட ரீதியான அரசு என்று கூறிக்கொண்டு தான் எடுக்கும் நடவடிக்கைகளை மறந்து, அதிகம் பேசுவதுதான் தமிழர்களுக்கு விசனத்தையும், எரிச்சலையும் தருகின்றது.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்துக்குள் - இராணுவத் தளபதி மீது - இரண்டு மாதங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவ இலக்கு ஒன்றின் மீதான அத்தாக்குதலுக்குப் பதிலடி என்ற பெயரில் - புலிகளின் தெரிவு செய்யப்பட்ட இலக்குகள் மீது தாக்குகின்றோம் என்ற கணக்கில் - அப்பாவித் தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் அதிருப்திக்கும், கண்டனத்துக்கும் இந்த வான் வழித் தாக்குதல்கள் உள்ளாகின.

மக்கள் குடியிருப்புகள் மீதான இந்த வான் தாக்குதலை அரச பயங்கரவாதமாகவே உலகம் பார்த்தது. தமிழரும் அப்படியே விமர்சித்தனர்.

யுத்தநிறுத்த காலத்திலேயே புலிகளின் பிரதேசத்துக்குள் ஆழ ஊடுருவி நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் மகேந்தி படுகொலை செய்யப்பட்டார். நேற்றுமுன்தினம் மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் படுகொலையை ஒத்ததாகவே புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவி அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேபோன்றுதான், கிழக்கில் புலிகளின் மூத்த தளபதியான கேணல் ரமணன் சினைப்பர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

அந்த வகையில், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒரு மேஜர் ஜெனரல் உயிரிழந்திருக்கிறார்.

அவரின் கொலைக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று விடுதலைப் புலிகள் மறுப்பதை எத்தனை பேர் ஏற்றுக்கொள்வர் என்பது கேள்வியே.

ஆனால் அதேவேளை, அந்தச் செயலைப் 'பயங்கரவாதம்' என்று விமர்சித்து கண்டிக்கும் தகுதி - தகைமை - தென்னிலங்கை அரசுத் தலைமைக்கு உண்டா என்பதும் மற்றைய புறத்தில் எழும் கேள்வியாக உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்களுக்கு முரணாக -

ஒட்டுப்படைகளை ஒழுங்கமைத்து, துணைப் படைகளை ஏவிவிட்டு, தமிழர் தாயகத்தில் ஒரு வன்முறைக் கலாசாரத்தை - கொலைகாரப் போக்கை - கட்டவிழ்த்து விட்டுக்கொண்டு -

வடபுற யாழ். தீபகற்பம் மற்றும் வன்னிப் பெரு நிலப் பரப்பு மீது அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்துக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தடையை விதித்துக் கொண்டு -

தமிழர் தாயகத்தில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் - புலிகளின் பிரமுகர்கள் மற்றும் பொது மக்களுக்கு எதிராக - ஆழ ஊடுருவித் தாக்கும் அணிகளை ஏவி விட்டுக்கொண்டு -

புலிகளைப் பார்த்து 'யுத்தநிறுத்த மீறல்', 'பயங்கரவாதம்' ஆகியவற்றைப் புரியும் குற்றவாளிகள் என்று அரசுத் தலைமை விமர்சிக்க முடியாது.

அப்படி விமர்சிக்க முயல்வது 'சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு என்றதாம்' - என்ற கதை மாதிரியே உள்ளது.

# வல்லைப் பாலத்தின் இரு புறங்களிலும் நடக்கும் சோதனையால் மக்கள் சிரமம்

கரவெட்டி, ஜூன்28

வல்லைப் பாலத்தின் இரு புறங்களிலும் படையினர் சோதனை நடத்துவதால் நேர விரயத்தை எதிர்நோக்குகின்றனர் என்று வடமராட்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வாகனங்களில் குறிப்பாக பஸ் மற்றும் மினிபஸ்ஸில் பயணிப்போர் வல்லை வெளிமுச்சந்தியில் இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பின்பு அதே பயணிகள் வாகனம் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வல்லைப் பாலத்தைத் தாண்டி அச்சுவேலி வல்லைச் சந்தியிலும் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.

இதேபோல் யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி செல்லும் பயணிகளும் குறிப்பிட்ட இரு இடங்களிலும் சோதனையிடப்படுகின்றனர்.

இரு சோதனைச் சாவடிகளுக்கும் இடையில் வல்லைப் பாலம் மட்டுமே உள்ளது. அதற்கு அருகிலும் மாடிக் காப்பரண் ஒன்றிலும் அதைச் சுற்றியுள்ள வல்லை நீரேரிக்கருகில் பத்துக்கு மேற்பட்ட காப்பரண்களிலும் இராணுவத்தினர் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இப்பாதுகாப்புக்கு மத்தியிலும் இரு இடங்களில் சோதனை நடவடிக்கை தேவையா என மக்கள் விசனத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையால் மருத்துவமனை உட்பட பல்வேறு தேவைகளுக்காக வருவோர் குறிப்பிட்ட நேரத்துக்கு உரிய இடத்தை அடைய முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (70)

### இந்து தர்ம ஆசிரியர் தெரிவுக்கு

## ஹர்த்தாலன்று நடந்த பரீட்சையை மீண்டும் நடத்தும்படி வேண்டுகோள்

தென்மராட்சி, ஜூன்28

கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற இந்து தர்ம ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கு ஹர்த்தால் காரணமாக சமூகமளிக்காதவர்களுக்கு பரீட்சையை வேறொரு தினத்தில் நடத்துமாறு பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளரைக் கோரியுள்ளனர்.

இந்து தர்ம ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை கடந்த 17, 24, 25 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது.

கடந்த 24ஆம் திகதி ஹர்த்தால் காரணமாக போக்குவரத்து வசதி இல்லாததால் இருநூறுக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் அன்றைய தினம் பரீட்சைக்குச் சமூகமளிக்கவில்லை. இருப்பினும் அன்றைய தினம் சமூகமளித்த பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

மறுநாள் பரீட்சைக்குச் சென்ற பரீட்சார்த்திகள் முதல் நாள் பரீட்சை நடைபெற்றதாக அறிந்தனர்.

முதல் நாள் நடைபெற்ற பரீட்சையின் இரு பாடங்களையும் வேறொரு தினத்தில் நடத்துமாறு அன்றையதினம் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகள் ஒப்பமிட்டு பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஊடாக பரீட்சைகள் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளனர். (117)

## முருகன் மீண்டும் உண்ணாவிரதம்

தமது மகளுக்கு இந்தியா செல்ல 'வீஸா' வழங்குவது தொடர்பாக உத்தியோகபூர்வமான பதில் எதுவும் இலங்கை அரசிடமிருந்து கிடைக்காததை ஆட்சேபித்து ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளியான முருகன் மீண்டும் உண்ணாவிரதத்தில் குதித்திருக்கின்றார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முருகன் - நளினி இருவரும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் புதல்வி இலங்கையில் வசித்து வருகிறார்.

நளினி - முருகன் இருவரும் தமது மகளை தமிழ்நாட்டுக்கு அழைத்து அங்கு கல்விவாய்ப்புவழங்கமுடிவுசெய்துள்ளனர்.

இதற்கு வசதியாக மாணவருக்கான 'வீஸா' அனுமதியை தமது மகளுக்கு வழங்கவேண்டும் எனக்கேட்டு நளினியும், முருகனும் முன்னர் 6 நாள்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்நிலையில் வீஸா வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளதாக உறவினர்கள் மூலம் நளினிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இருவரும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். எனினும், இலங்கை அரசிடமிருந்து அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் கிடைக்காததையடுத்து முருகன் மீண்டும் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளார். (ஐ)

## கல்வியியற் கல்லூரி மாணவியின் முறைப்பாடு குறித்து விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன்28

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மாணவி ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் செய்த முறைப்பாடு தொடர்பாக இறுதிக் கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் கல்லூரி நிர்வாகத்திற்கு ஒத்துழைக்கத் தவறினார் என்றும் மன நோயுள்ளவரரென்றும் கூறி மாணவி ஒருவர் 2004ஆம் ஆண்டு கற்றல் செயற்பாடுகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

மாணவி இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கட்டம் கட்டமாக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இவ்விசாரணைகளின் போது சம்பந்தப்பட்ட மாணவிக்கு மன நோய் எதுவும் இல்லையென மருத்துவ பரிசோதனை அறிக்கையின் மூலம் நிருபிக்கப்பட்டது.

இம்மருத்துவ அறிக்கை தொடர்பாக கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு மாணவியை கற்றல் செயற்பாடுகளை தொடர அனுமதி வழங்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு இடைநிறுத்திய மாணவியை மீள அனுமதிக்கும் அதிகாரம் தனக்கு உரியதல்ல என பீடாதிபதி பதிலளித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், கல்வியியற் கல்லூரிகளுக்கு பொறுப்பான ஆணைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது-

மேற்படி இடைநிறுத்திய மாணவியை மீள நியமனம் செய்யும் அதிகாரம் கல்லூரியின் பீடாதிபதிக்குரியது என ஆணைக்குழு பதிலளித்தது

இந்நிலையில் இம்மாணவியின் முறைப்பாடு குறித்த இறுதிக் கட்ட விசாரணைக்கு கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தார். பீடாதிபதி விசாரணைக்கு அன்றைய தினம் சமூகமளிக்கவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (ரி)

## பத்திரிகைகளில் படையினர் ஆர்வம்

கரவெட்டி, ஜூன்28

வீதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் சமீபகாலமாக பத்திரிகைச் செய்திகளை அறிவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். வாசிகசாலைகளுக்குச் சென்றும், கடைகளில் பத்திரிகைகளை வாங்கி வருவோரிடமும் பத்திரிகைகளில் வரும் குறிப்பாக அரசியல் நிலைவரம் தொடர்பான செய்திகளை மொழிபெயர்த்துக் கூறும்படி கேட்டறிந்து கொள்கின்றனர். (204-70)

# தீவக மக்களின் பிரச்சினை குறித்து ஆராய சமூக சேவை அமைச்சு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன்28

தீவக மக்களின் பிரச்சினைகளை ஆராய நடமாடும் சேவை எதிர்வரும் 2ஆம் திகதி நடத்தப்படவுள்ளது என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.தீவக மக்களினது நாளாந்தப் பிரச்சினைகளையும், மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளையும் கருத்திற்கொண்டு ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், யாழ்.-கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் 2ஆம் திகதி தீவகப் பகுதிகளுக்கான நடமாடும் சேவையொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

இதன் பிரகாரம், எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி நடமாடும் சேவையில், மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளான சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர், காணி, வீட்டு வசதி போன்ற பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், தீவக அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான பல்வேறு திட்டங்களைக் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டு, உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

தீவக மக்களின் தொழில்துறை சார்ந்து நிலவுகின்ற அனைத்துத் தடைகளையும் நீக்குவதற்கான நடவடிக்கைகளும், அப்பகுதிகளில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படும் கெடுபிடிகளை அகற்றுவதற்கான உடனடித் தீர்வுகளும் எடுக்கப்படவுள்ளதுடன், கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சொத்துக்களை இழந்தோருக்கான இழப்பீடுகளை துரித கதியில் வழங்கும் நோக்குடன் உயர்மட்ட மாநாடு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் அமைச்சின் உயர் அதிகாரிகள், அரச நிர்வாக அதிகாரிகள் மற்றும் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உட்பட உரிய தரப்பினர் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் - என்றுள்ளது. (204)

### உதயவாக்கு

நேசிக்க வேண்டியதை நேசிக்கவும் வெறுக்க வேண்டியதை வெறுக்கவும் உதவுகிறார்கள் கலைஞர்கள். நவீன காலத்தில் அதுதான் தேவைப்படுகின்றது. -டாக்டர் எஸ்.ராதகிருஷ்ணன்

### நாளை

ஆனி - 15
வியாழக்கிழமை
29.06.2006
திதி : சதுர்த்தி
பின்னிரவு : 01.48
நட்சத்திரம் : ஆயிலியம்
முன்னிரவு : 10.16
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 07.26 - 08.56
ராகுகாலம் : 01.26 - 02.56

## பண்ணிசை வகுப்பு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. புதிதாக வகுப்பில் சேர விரும்புவோர் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்டுகள் தீவிரவாதத்தை நிறுத்த நேபாள கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்து

காத்மண்டு,ஜூன்28

ஆள்கடத்தல், பணம் பறித்தல், கட்டாய மூளைச் சலவை மூலம் கருத்துத் திணிப்பு போன்ற செயல்களை மாவோயிஸ்டுகள் உடனடியாக நிறுத்தவேண்டும். அரசுடன் அவர்கள் செய்துகொண்டிருக்கும் உடன்பாட்டின்படி 25 அம்ச நடத்தை நெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று நேபாளத்தில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏழு பிரதான அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலரும் ஆளும் கூட்டணியின் தலைவருமான மாதவ் குமார் நேபாள், மத்திய நேபாளத்தில் உள்ள சிதாவன் நகரத்தில் பேசும் போது இதை வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஏழு கட்சிக் கூட்டணிக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே 8 அம்ச உடன்பாடு ஏற்பட்டது. நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அந்த உடன்பாட்டை நேர்மையாக செயற்படுத்த வேண்டும். அதன்படி அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

மாவோயிஸ்டுகளின் வசம் உள்ள ஆயுதங்களையும் தளபாடங்களையும் அவர்களிடம் இருந்து எவ்வாறு வாங்குவது அவற்றை என்ன செய்வது என்பது பற்றியெல்லாம் பேச்சு நடத்தி முடிவு செய்யவேண்டும் என்றார்.

மக்களை மிரட்டி கட்டாய நன்கொடை வசூலிக்கும் செயலை மாவோயிஸ்டுகள் உடனே நிறுத்தவேண்டும்; பறிமுதல் செய்த பொருள்களை அவர்களிடம் திருப்பி ஒப்படைத்துவிடவேண்டும் என்று சாதாரண மக்களிடமிருந்து கூட்டணியின் மற்றொரு கட்சியான நோபாள காங்கிரஸ் தலைவர் பத்ம நாராயன் சௌத்திரி வலியுறுத்தியுள்ளார்.

(202)

# அ.தி.மு.க. அரசு வாங்கிய கடனுக்கு தினமும் 16 கோடி ரூபா வட்டி

## சுட்டிக்காட்டுகின்றார் தமிழக முதல்வர்

சென்னை,ஜூன்29

அ.தி.மு.க. அரசு விட்டுச் சென்ற கடனுக்காக தினமும் 16.53 கோடி ரூபாவை வட்டியாகச் செலுத்தவேண்டியுள்ளது என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

2001ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி 36 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாக விட்டுச் சென்றதால் தினமும் 11 கோடி ரூபாவை வட்டியாகக் கட்டவேண்டி இருந்ததாக முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான ஜெயலலிதா கூறியுள்ளார். இது தவறு. 28,685.22 கோடி ரூபா தான் கடன் இருந்தது. எந்த ஓர் அரசும் வளர்ச்சி செலவுகளுக்காக தேவையான கடன் பெறுவது இயல்பு.

இதற்கு நடப்பு நிதியாண்டில் வட்டியாக ரூபா 4995 கோடி வழங்கவேண்டியுள்ளது. இதனால் தினமும் வட்டியாக 16.53 கோடி செலுத்தவேண்டும். தி.மு.க. அரசு மீது குறை கூறிய ஜெயலலிதா இதையெல்லாம் அறிவாரா?

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் நிலுவையில் இருந்த சுமார் 7 ஆயிரம் கோடி கடன் வட்டித் தொகையை ரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவரும் நிலையில் அது என்னவாயிற்று என ஜெயலலிதா கேள்வி எழுப்புவது பற்றி விவசாயிகள்தான் எண்ணிப் பார்க்கவேண்டும்.

புதிய கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் நிலையில் அதை வழங்கவில்லை என்று ஜெயலலிதா கூறியுள்ளார் - என முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

(202)

# இரண்டாவது பணக்காரர் ஏழைகளுக்கு நிதியுதவி

உலகத்தின் இரண்டாவது பெரிய பணக்காரரான அமெரிக்காவைச் சேர்ந்த வாரன் பூபிற் தனது இலாபத்தில் 85 சதவீதத்தை வறிய மக்களுக்கு வழங்க இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த உதவி அவர் மரணிக்கும் வரை தொடரும் என்றும் கூறினார். வருடாந்தம் பல கோடி டொலர்களை இலாபமாக உழைக்கும் இவர் ஏழை மக்கள் பக்கம் தனது பார்வையைத் திருப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. பில்கேட்ஸின் மனிதாபிமான உதவி களுக்கு இவர் நிதி சென்றடையுமெனத் தெரியவருகிறது.

(202)

உலக அரங்கில்



அண்மையில் லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் பிறந்தநாள் விழாவில் எழுத்தாளர் ரோவ்லிங், பாப் தி பில்டர் ஆகியோர் மகாராணியை சந்தித்துப் பேசுவதை படத்தில் காணலாம்.

# வீரப்பனின் மனைவி பொலீஸாருக்கு பெண்களை மதிக்கும்படி அறிவுரை

சென்னை, ஜூன்28

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் போல பொலீஸ்காரர்களும் பெண்களை மதித்திருந்தால் பிரச்சினையே வந்திருக்காது என வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கூறினார்.

சென்னை எத்திராஜ் கல்லூரியில் மனித உரிமை மேம்பாட்டுத்துறை சார்பில் கடந்த திங்கட்கிழமை நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

வீரப்பனைப் பிடிக்க வந்த அதிரடிப் படையினரால் காட்டுக்குள் போய் அவரைப் பிடிக்க முடியவில்லை. மலையோர கிராம மக்களை, குறிப்பாக பெண்களை பெரும் கொடுமைகளுக்கு ஆளாக்கினர்.

பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு நிவாரண உதவி தர அரசு இன்னும் ஏதும் செய்யவில்லை.

படிப்பறிவில்லாத வீரப்பன், தன்னைக் கொல்ல வந்தவர்களிடம் இருந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கொலைகள் செய்தார். அதுவும் தவறுதான். அதற்காக தண்டனை கிடைத்தது.

ஆனால், படித்த அதிகாரிகள் தவறுகள் செய்தது என்ன நியாயம்? அவர்களுக்கு ஏன் இந்த அரசு தண்டனை கொடுக்கவில்லை?

எதிர்காலத்தில் வீரப்பன் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது பழைய பிரச்சினைகளைக் கிளப்பிவிடக் கூடாது என்பதற்காக, எங்கள் குடும்பங்களை மொத்தமாக அழித்துவிட பொலீஸார் முயற்சித்தனர்.

பொலீஸ்காரர்களைப் பார்த்துத்தான் பொதுமக்கள் கெட்டுப் போகிறார்கள். பொலீஸ்காரர்கள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். வீரப்பன் கொள்ளைக்காரன் என பொலீஸார் கூறுகின்றனர். ஆனால் எந்தப் பெண்ணையும் கெடுத்ததில்லை.

பெண்களை மதிப்பதில் என் கணவரைப் போல பொலீஸ்காரர்களும் நடந்திருந்தால் இதுபோன்ற பிரச்சினையே வந்திருக்காது - என்றார்.

(202)

# கிழக்கு திமோர் பிரதமர் இராஜினாமா: மக்கள் கிளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றி

கிழக்கு திமோர் பிரதமர் பதவியிலிருந்து மாரி அல்காதிரி ராஜினாமாச் செய்துவிட்டார். இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக, அதிபர் கோரினால் உதவிகள் செய்யத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதையடுத்து அங்கு ஏற்பட்டிருந்த அரசியல் பதற்ற நிலை தணிந்து சுமூகநிலை ஏற்படுவதற்கு வழி பிறந்துள்ளது.

பசுபிக் சமுத்திரத்தில் இந்தோனேஷியத் தீவுக்கு அருகில் உள்ள நாடு கிழக்கு திமோர் குடியரசு. பிரதமராக மாரி அல்காதிரி பதவி வகித்தார்.

வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் இந்நாட்டில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகாண முடியாமல் இருக்கிறது. இந்நிலையில் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையிலும் ராணுவத்தின் ஒரு பிரிவினருக்கும் பொலீஸ் துறைக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் பிரதமர் மாரி ஈடுபட்டார்.

அதிபர் குஸ்மாவோவுக்கு பிரதமரின் போக்கு பிடிக்கவில்லை. நீங்கள் ராஜிநாமா செய்கிறீர்களா? நான் செய்யட்டுமா? என்று கோபமாகக் கேட்டார் அவர். அதிபர் ராஜினாமா செய்தால் மக்களின் கோபம் நமக்கு எதிராகத் திரும்பும் என்று உணர்ந்து கொண்ட பிரதமர் ராஜினாமா செய்துவிட்டார். அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் நீடிப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறார்.

(202)

# உலக அளவில் பணம் கைமாறுவதை கண்காணிக்க அமெ. இரகசியத் திட்டம்

## செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது புஷ் சீற்றம்

பணம் கைமாற்றம் செய்யப்படுவது தொடர்பான இரகசியங்களைக் கண்டு பிடிப்பதற்கான திட்டங்களை வெளியிட்டதன் மூலம் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை அமெரிக்க பத்திரிகைகள் குழப்பி வருவதாக அதிபர் புஷ் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இரகசியங்களை வெளியிட்டமை அவமானத்துக்குரியது என்று புஷ் சாடினார். பணம் கைமாற்றம் தொடர்பான இரகசியங்களைக் கண்டுபிடிக்கும் திட்டத்தை அவர் நியாயப்படுத்தினார்.

அமெரிக்க அரசாங்கம் வங்கிக் குழுவொன்றை பயன்படுத்தி உலகளாவிய ரீதியில் பணக் கைமாற்றங்கள் தொடர்பான இரகசியங்களை கண்காணித்து வருகின்றது என்ற வகையில் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை அண்மையில் விவரங்களை வெளியிட்டிருந்தது.

இச்செய்தியை பொது நலனை உத்தேசித்தே வெளியிட்டதாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

அமெரிக்காவைக் காயப்படுத்த எண்ணியுள்ள சிலருக்கு எதிராக நாங்கள் போர் தொடுத்துள்ளோம். இந்த இரகசியங்களை சிலர் வெளியிடுவதும் பத்திரிகைகள் அதை வெளியிடுவதும் அமெரிக்காவுக்கு எதிராக பெரும் பாதகத்தைச் செய்வதாகும் என்று அதிபர் புஷ் கண்டித்துள்ளார்.

(ப)

# சீயர்ஸ் கோபுரத்தை தகர்க்கச் சதி; அமெரிக்காவில் ஏழுபேர் கைது!

நியூயோர்க், ஜூன்28

அமெரிக்காவின் சீயர்ஸ் கோபுரத்தையும் அதிலுள்ள முக்கிய அலுவலகங்களையும் குண்டுவைத்துத் தகர்க்க மேற்கொண்ட சதி வேலை உளவுத்துறையால் முறியடிக்கப்பட்டுள்ளது. சதியுடன் தொடர்புடையவர்கள்எனக் கருதப்படும் 7பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவிலேயே மிக உயரமான கட்டடம் சீயர்ஸ். இது ஆயிரத்து 450 அடி உயரமானது. இக் கட்டடத்தைத் தகர்க்க சதி நடப்பதாக உளவுத்துறைக்கு (எவ்.பி.ஐ) தகவல் கிடைத்தது. உளவுத்துறை நடத்திய அதிரடி சோதனை நடவடிக்கையின்போது மியாமி நகரில் ஓர் இரகசிய இடத்தில் பதுங்கி இருந்த 7பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களுக்கும் அல்-கெய்டா இயக்கத்துக்கும் தொடர்புள்ளதா என்பது குறித்து உளவுத்துறை விசாரணை நடத்தி வருகின்றது.

(202)

# குஷ்புவுக்குப் பிடியாணை



நடிகைகள் ஷில்பா ஷெட்டி, ரீமா சென்னுக்கு பிடியாணை பிறப்பித்தது குறித்து நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்த நடிகை குஷ்புவுக்கும் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இரு நடிகைகளுக்கும் பிடியாணை பிறப்பித்தது குறித்து குஷ்பு கருத்துத் தெரிவிக்கையில் நீதிபதிகள் சரியான கவனம் செலுத்தாமல் இதுபோன்ற வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறார்கள் - என்றார்.

இதனால் குஷ்பு மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வழக்கறிஞர் தட்சிணாமூர்த்தி மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி குஷ்புவுக்கும் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

இதற்கிடையே நடிகை குஷ்பு, தான் படப்பிடிப்பில் இருப்பதால் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாது என்று நீதிமன்றத்துக்குப் பதிவுத் தபால் மூலம் பதில் அனுப்பி உள்ளார். தனக்காக வழக்கறிஞரை நியமித்தபின் கடிதம் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாது என்று தெரிவித்துள்ளதால் நீதிபதி இளங்கோ புதிதாக பிடியாணை பிறப்பித்து குஷ்புவையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிட்டார்.

(202)

உங்கள் மகிழ்ச்சியான புதிய வாழ்வு....
மங்களகரமாக ஆரம்பிக்கட்டும்....!
அற்புதமான அழைப்பிதழ்களோடு!.... ஆயிரக்கணக்கான தெரிவுகளில்...
போஸ் காகிதாதியாளர்கள்
03. மருத்துவமனை வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P 021 222 6549
Wedding Cards
Wedding Cake box, Reception,
Puberty Ceremony & Birthday Invitation Cards.
போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்
252. பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
0777 737438

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரி.ஆர்.ரெக் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடமாடும் கணனி சேவையின் ஆரம்ப நிகழ்வும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் சான்றிதழ் வழங்குவதையும் சான்றிதழ் பெற்ற மாணவர்களில் ஒருபகுதியினர் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் முதலிரு படங்களிலும் -

நடமாடும் கணனி சேவையை நடத்தவுள்ள பஸ்ஸை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி தேவராஜா நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பொருண்மிய மதியுரையகத் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா கணனியை இயக்கிவைப்பதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# போர்க்கலையில் வல்லுநர்களாகி போராட வேண்டிய நிலையில் மக்கள்

## இப்படிக் கூறுகின்றார் கட்டளைத் தளபதி லோறன்ஸ்



தமிழ் மக்கள் யாவரும் போர்க்கலையில் வல்லுநராக உருவாகிப் போராட வேண்டிய நிர்பந்தத்தினை சிறிலங்கா அரச படைகள் ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு வடபோர்முனைக் கட்டளைத்தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பளை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகிய மாணவர் சேனைக் கட்டுமானப் பயிற்சி நிகழ்வில் கருத்துரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பளை மத்திய கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை இந்நிகழ்வு ஆரம்பமானது.

பொதுச்சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பளை பிரதேச அரசியல்துறைப் பொறுபபாளர் மேனன், பளைப் பிரதேச மகளிர் பொறுபபாளர் சந்தனா, போராளி விடுதலை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் ஏற்றிவைத்தார்.

கருத்துரையினை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், வட போர்முனைக்கட்டளைத் தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் தளபதி லோறன்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்றைய சூழ்நிலை என்பது மிகவும் ஆபததான சூழ்நிலை ஆகும். எதிரி எந்த வேளையிலும் பாரியளவில் போரைத் தொடங்கி நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட ஆயத்தமாகின்றான்.

இந்நிலையில் தமிழ் மக்கள் யாராக இருந்தாலும் வயது வேறுபாடு இன்றி மிகக் கோரமாகப் படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த நேரத்தில் எமது மக்கள் அனைவரும் போர்க் கலையில் வல்லுநர்களாக உருவாக்கம் பெற்று எதிரிக்கு எதிராகப் போராட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருகின்றது.

கடந்த காலத்தில் ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையின் போது எவ்வாறு மக்கள் படை, மாணவர் சேனை, எல்லைப்படை என எமது மக்கள் போர்க்கலை பெற்று எதிரியை விரட்டி அடித்தார்களோ அதே போன்ற ஒரு சூழலே இன்றும் உருவாகி உள்ளது என்றார்.

இக்கருத்துரையின் பின்னர் பயிற்சி ஆசிரியர் நா.இசைப்பிரியன் தலைமையில் லெப். கேணல் லோறன்ஸ் பயிற்சியினை ஆரம்பித்து வைத்தார். (203)

### பாதணிகள் அன்பளிப்பு

வட்டக்கச்சி, ஜூன்28

பூநகரி-முழங்காவில் கிராமத்தில் பூநகரி-முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தால் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு 'சோஆ' நிறுவனத்தின் நிதி உதவியுடன் பாதணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

200 வரையான மாணவர்களுக்கு இவ்வாறு பாதணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முழங்காவில் பிரதேசத்தில் உள்ள ஏனைய முன்பள்ளிகளின் மாணவர்களுக்கும் பாதணிகள் அன்பளிப்பாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203- 405)

### ஆனி உத்தர திருவிழா

உருத்திரபுரம் எள்ளுக்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய ஆனி உத்தர திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பகல் அபிஷேக ஆராதனைகளும், இரவு விசேட சொற்பொழிவுகளும், மங்கல வாத்திய இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (203- 405)

## மண்ணெண்ணெய்க்கு விலை நிர்ணயம்

வட்டக்கச்சி,ஜூன்28

வன்னிப் பகுதியில் மண்ணெண்ணெய்க்கு நிர்ணய விலை விதிக்கப்பட்டுள்ளது என்று நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கான ஆகக் கூடிய சில்லறை விலை 57 ரூபா எனவும் -

இதற்கமைய விற்பனையாளர்கள் மண்ணெண்ணெய்யை விற்பனை செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடைமுறை கடந்த 24ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளதெனவும் நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியின் ஆளுகையினர் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு விலைகளில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதை இனங்கண்ட ஆளுகையினர் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த நிர்ணய விலையை விதித்துள்ளனர். (203-405)

## வித்தியாலயத்துக்கு நூலகம் அமைப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்28

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு நூலகம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த திருமதி இராசலட்சுமி சந்திரபாலன் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் இந்த நூலகம் அமைக்கப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூலகத் திறப்பு விழா அண்மையில் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் ஏற்றி வைத்தார்.

நூலகத்தை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராசலட்சுமி சந்திரபாலனின் படத்தை முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், வித்தியாலய அதிபர் வ.நடராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். (203-353)

## முள்ளியவளை வித்தியானந்தாவில் விடுதி ஆரம்பிக்க வேண்டுகோள்

புதுக்குடியிருப்பு,ஜூன்28

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி விரைவில் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

முன்னர் இப்பாடசாலையில் மாணவர் விடுதி இயங்கி வந்தது. தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்து வந்தனர். அவர்களில் பலரும் இன்று உயர் பதவிகளிலும் பணிபுரிகின்றனர்.

யுத்தச் சூழ்நிலை காரணமாக தங்கும் விடுதி தற்காலிகமாக மூடப்பட்டது. 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர் மீண்டும் விடுதியை இயக்குமாறு மாணவர்களும் பெற்றோரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது. ஆனால் போதிய கட்டட வசதி இல்லை என்ற காரணத்தால் இதுவரை மாணவர் விடுதி செயற்படவில்லை.

நெடுங்கேணி, தண்டுவான், ஒதியமலை, பட்டிகுடியிருப்பு, செம்மலை, நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், துணுக்காய், காநாட்டுக்கேணி, பாண்டியன்குளம், யோகபுரம், பாலிநகர் போன்ற அயல் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களும் தற்போது முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் தனியார் வீடுகளில் தங்கிப் பாடசாலை சென்று வருகின்றனர்.

ஆகவே இப்பாடசாலையில் மாணவர் விடுதியை செயற்பட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்று மாணவர்களும் பெற்றோர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (353)

### கோழிவளர்ப்பிற்கு ஊக்குவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கோழிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிலாவத்தைக் கிராமத்தில் பத்துக் குடும்பங்களுக்கு தலா [illegible] கோழிகள் வீதம் வழங்கப்பட்டன. (203-405)

### சுகாதாரக் கருத்தரங்கும் மருத்துவ சிகிச்சையும்

வட்டக்கச்சி,ஜூன்28

நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் குடியிருப்பான சிலாவத்தை, அன்னாம்பாள் இடைத்தங்கல் முகாம் மக்களுக்கான சுகாதார செயற்பாட்டுக் கருத்தரங்குகளை நடத்திவருவதுடன் மருத்துவ சிகிச்சையும் வழங்கிவருகின்றனர்.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் விஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். அத்துடன் இடைத்தங்கல் முகாம் பகுதி சிரமதானப் பணிமூலம் சுத்தம் செய்யப்பட்டது. (203-405)

### புதிய கற்கை நெறிக்கான நேர்முகத்தேர்வு இன்று

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் 2006/2007 ஆம் ஆண்டுக்கான கட்டட நிர்மாணத் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கான நேர்முகத்தேர்வு இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கனகபுரத்தில் உள்ள தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறியை மேற்கொள்வதற்கு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்று உயர்தரத்தில் கணிதவியல், உயிரியல், கணக்கியல் துறைகளில் சித்திபெற்றவர்கள் தகுதியுள்ளவர்களாவர்.

தகைமையுள்ளவர்களை இன்று நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவக அதிபர் கேட்டுள்ளார். (203-405)

### பற்சிகிச்சை முகாம்

தமிழீழ சுகாதார சேவையினரின் நடமாடும் பற்சிகிச்சைப் பிரிவினர் பிரதேசங்கள் தோறும் பற்சிகிச்சை முகாம்களை நடத்தி வருகின்றனர். இதன் அடிப்படையில் கடந்த 21ஆம் திகதி முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இச்சிகிச்சையின் போது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் சிகிச்சை பெற்றனர். (203-405)

### பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வட்டக்கச்சி,ஜூன்28

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் இயங்கும் பெண்கள் தொழில் பயிற்சி நிறுவனத்தில் புதிய அணியினருக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனி, தையல், ஐசிங், தலை அலங்காரம், பூவேலை, பெயின்ரிங், குஞ்சங்கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகளே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சிகளை தொடர விரும்புவோர் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-405)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
Fax: 021 222 5606
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புகையிலையை சந்தைப்படுத்துவதில் சிரமம்

வடமராட்சி, ஜூன்28

யாழ் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையினால் புகையிலையை சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் சிரமமடைந்து வருகின்றனர்.

குடாநாட்டின் பணப்பயிர்களில் ஒன்றான புகையிலை இம்முறை வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களில் கணிசமான அளவு பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்டது.

அறுவடை செய்யப்பட்ட புகையிலையை விவசாயிகள் உலர்த்தி, பகையிட்டு பதப்படுத்தி சந்தைப்படுத்தத் தயார்நிலையில் வைத்திருக்கின்ற போதிலும், புகையிலையைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்த வியாபாரிகள் முன்வரவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (204-173)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

தென்மராட்சி, ஜூன்28

மின்சார நீரிறைக்கும் இயந்திரத்தினை (மோட்டார்) திருத்தும் பணியில் ஈடுபட்ட நபர் மின்சாரம் தாக்கிப் பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றது.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் லகுநாதன் (வயது - 31) என்பவரே மரணமானவராவார்.

(204-117)

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

வடமராட்சி, ஜூன்28

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் ஆனிமாத இதழ் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆசிரியர் ச.நவரத்தினராசாவும், மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர்.

(204-173)

## பன்றியால் விபத்து

தென்மராட்சி,ஜூன்28

வீதியின் குறுக்கே ஓடிய பன்றி வீதியில் சமாந்திரமாகச் சென்ற இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் அவற்றில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சி, கனகன்புளியடிச் சந்திக்குச் சமீபமாக இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்


(117)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் கதிரேசு சட்டநாதர்**

[பணிக்கர் கோயிலடி, அல்வாய் வடமேற்கு]
[அல்வாய்- திக்கம்]
திதி: 28-06-2006



தோற்றம் 17-04-1933 — மறைவு 29-05-2006

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய்
இன்முகம் காட்டி வாழ்ந்த ஐயாவே!
நீங்கள் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள் ஐயா!
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
ஒருமுறை வந்தெம்மை பாரீரோ ஐயா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது!

எமது அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்று (28-06-2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பணிக்கர் கோயிலடி,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்- திக்கம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(51479)(26.19.14)

---

### நடமாடும் வீட்டில் படமாகிப் போன எங்கள் இதயத் தெய்வத்தின் 6ஆம் மாத நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 - 02 - 1951



ஆண்டவன் அடியில் 02 - 01 - 2006

**திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை**

ஜெகதா ஹாட்வெயார்ஸ், ஜெகதா மொபைல் உலகம் } யாழ்ப்பாணம்

திதி:28-06-2006

எங்குமே நிறைந்ததான
இறைவனை நினைக்கும் நெஞ்சம்
தங்கமே நிகர்த்த உள்ளம்
தயங்கிடாது உதவும் கைகள்
எங்களை உயரச் செய்ய
என்றுமே உழைத்த வாழ்வு
இங்கிவை கொண்ட மேலோய் - உனை
எங்ஙனம் மறப்போம் அம்மா!

145/3, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 8169

கணவர், மகன்மார், தாய், சகோதர, சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார்.

(51634)(21.19.14.26)

---


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற
Graphic துறையில் புதிய வடிவமைப்புக்களுடன் ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறி

**Diploma in Graphic Designing**

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

**Diploma in Video Mixing**

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 03/07/2006 :- 08.30


---

### 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 - 05 - 1954



மறைவு 29 - 05 - 2006

**செல்வி சுப்பிரமணியம் இராசமணி**

கடந்த 29-05-2006 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28-06-2006) புதன்கிழமை காலை 7 மணிக்கு சுப்பர்மடம் அந்தியேட்டி மடத்திலும் அதனைத் தொடர்ந்து வீட்டில் கிரியைகள் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:**- நாட்டின் சூழ்நிலை காரணமாக அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓடக்கரை,
பருத்தித்துறை.
(51605)
(26.19.14)

அன்னாரின் சகோதரிகளும், பெறாமகனும்.

---

### இரண்டாம் ஆண்டின் நினைவினில்...

மலர்வு 13-01-1964



உதிர்வு 20-06-2004

**திருமதி வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்**

திதி: 28.06.2006 திருதியை

புன்னகை பூக்குமுந்தன் பூ முகம் நிழலானதம்மா!
எங்கள் வசந்தத்தின் ஆத்மா - இறைவன்
திருவடியில் இன்புற்று அமர்ந்திருக்க
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மாதகல் வடக்கு,
மாதகல்.
(51633)(32.19.14.26)

-குடும்பத்தினர்.

---

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 03 - 1925



இறப்பு 02 - 07 - 2003

**அமரர் தம்பையா இளையதம்பி**

(இளையதம்பி அன் சன்ஸ் - உரிமையாளர்)
திதி: பூர்வபக்க திருதியை 28-06-2006

பார்த்த விழி பூத்திருக்க பறந்து நீங்கள் சென்றதேனோ?
இறந்த செய்தி இன்றுபோல இதயமெல்லாம் துடிக்கிறதே!
சிறகிழந்த பறவைகளாய் உமையிழந்து தவிக்கிறோமே!

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(51426)
(26.19.14)

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்ராங் அணிக்கெதிரான கிரிக்கெட் ஆட்டம்: மகாதீபம் அணி 18 ஓட்டங்களால் வெற்றி

பரந்தன்,ஜூன்28

புதுக்குடியிருப்பு சுப்ராங் அணியினருக்கும் கிளிநொச்சி மகாவித்தியால மகாதீபம் அணியினருக்குமிடையே நடைபெற்ற கடினப் பந்து கிரிக்கெட் போட்டியில் மகாதீபம் அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

மாலதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற 35 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாதீபம் அணி 35 பந்துப் பரிமாற்ற நிறைவில் 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் நிதர்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 35 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் மகாதீபம் அணியின் இறுதி இலக்குகளுக்கான இணை ஓட்டமாக இறுதி நான்கு பந்துப் பரிமாற்றங்களில் 52 ஓட்டங்கள் பெறப்பட்டன.

இறுதி இலக்குகளில் ராஜீ 27 ஓட்டங்களையும் த.சஞ்சீவன் 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பிரதீபன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

181 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய சுப்ராங் அணி 26 பந்துப் பரிமாற்ற நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

தீபராஜீ 39 ஓட்டங்களைப் பெற்றார். நிதர்சன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முடிவில் கிளிநொச்சி மகாவித்தியாலய மகாதீபம் அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (203-352)

# சிறந்த வீரர்களுக்கு பரிசில் வழங்கல்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் 2005/2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறந்த வீரராக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.பிரசன்னாவும் சிறந்த வீராங்கனையாக கொக்குவில் ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி வினோஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது இடம்பெற்றது.

இதேவேளை, இச்சங்கத்தின் 2006/2007 ஆம் ஆண்டுக்கான பணிக்கு தலைவராக எவ்.ரி.அல்பிறேட்டும் செயலாளராக ரி.சிவதாஸும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (203)





வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டிகளில் கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த 17 வயதுப் பிரிவினர் முதலிடத்தையும் 15 வயதுப் பிரிவினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலய உடற்கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.யோகநாதன், பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் மற்றும் ஆசிரி யர்களுடன் 17 வயதுப் பிரிவு மாணவியரை முதலாவது படத்திலும் 15 வயதுப் பிரிவு இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: தென்மராட்சி செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## முறையற்ற மின்வெட்டு தகுமோ?

எட்டடிக்க ஒருநாள் நிற்கும்
ஏழுக்கே மறுநாள் நிற்கும்
சட்டியில் கறியைக் கூட்ட
சடுதியாய் மறுநாள் நிற்கும்
இட்டம் போல் உணவை உண்ண
இடையிலே ஒருநாள் நிற்கும்
பாட்டியும் குப்பி விளக்கைத் தேடி
பல் உடைந்து படுக்கை யானாள்
கெட்ட இக் கள்வர் கூட்டம்
"கிடு கிடென" உட்புகவோ
திட்ட மிட்டு கள்வற் கெல்லாம்
திருட நீர் உதவலாமோ?
வெட்டுதற்கும் ஒரு விதிமுறையை
வகுத்திடல் தப்போ சொல்வீர் ?

*- விகடகவி.*

## காணாமற்போகும் பசுக்கள்

அண்மைக் காலமாக நல்லூர் கோயிலை அண்டிய பகுதிகளில் வீடுகளில் வளர்க்கப்படும் பசுமாடுகள் மேய்ச்சலுக்காக வெளியே விடப்படுகின்றபோது காணாமற்போகும் சம்பவங்கள் அதிகரித்தவண்ணமுள்ளன. தற்போது நிலவும் அசாதாரண சூழலைப் பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அனேகமாகக் காணாமற்போகும் பசுமாடுகள் கடத்திச் செல்லப்பட்டு இறைச்சித் தேவைக்காக கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எனவே பசுமாடுகளை வளர்ப்போர் உரிய முறையில் அவற்றை வீடுகளில் கட்டி வைத்து வளர்த்தால் அவை காப்பாற்றப்படலாம். சட்டவிரோதமாக பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்றவண்ணமுள்ளன. இன்றைய நெருக்கடியான சூழலில் இதுபோன்ற ஈனச் செயல்களில் ஈடுபடுவோர், நாம் தெய்வமாகப் போற்றும் பசுமாடுகளை கொல்லாமல் விட்டால் புண்ணியமாகும்.

**ஏ.கே.ஜனகன்.**

## கல்லுடைக்கும் ஆலை விளக்கம்

21.06.2006 உதயனின் வாசகர் திருமுகம் பத்தியில் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது யார்? என்ற தலைப்பில் பிரசுரமான கடிதம் தொடர்பாக இந்த விளக்கத்தை வழங்குகின்றோம்.

கடந்த வருடம் மே மாதத்தில் இருந்து மத்திய சுற்றாடல் அதிகார சபை யாழ்ப்பாணம் அமைவிட அனுமதி, வலி.கிழக்குப் பிரதேச சபையின் கட்டட அனுமதி, யாழ்.மாவட்ட இயந்திரங்கள் பரிசோதனை பொறியியலாளரின் அனுமதி, கோப்பாய் பிரதேச செயலாளரின் தொழில் பதிவுச் சான்றிதழ் ஆகியன பெறப்பட்ட இந்த சுண்ணாம்பு கல்லுடைக்கும் ஆலை செயற்பட்டு வருகிறது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இந்த ஆலை அமைவதற்கான அமைவிட அனுமதி வழங்குவதற்கான கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர், நீர்வேலி பிரதேச சபைச் செயலாளர், அச்சுவேலி தெற்கு ஆவரங்கால் கிராம சேவையாளர், நவோதயா சனசமூக நிலையத் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த ஆலையை அமைப்பதற்கான தொழில் கடனை நெல்லியடி வர்த்தக வங்கி வழங்கியுள்ளது.

இந்த ஆலை அமைந்துள்ள இடத்தையும் மக்கள் குடியிருப்புப் பகுதியையும் தொண்டைமானாறு கடல் நீர் ஏரி பிரிக்கும் பகுதியாகும். ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் மக்கள் குடியிருப்பு அமைந்துள்ளது.

இப்பகுதியிலிருக்கும் குடிதண்ணீர் கிணறு இந்த ஆலையிருந்து 450 மீற்றருக்கு அப்பால் உள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கமைய கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் அனுமதியுடன் சிமெந்து பிளேட் இட்டு மக்களின் பாவனைக்கு ஏற்றவகையில் கிணறு மூடப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு கடல் நீர் ஏரியில் மழைகாலத் தண்ணீர் தேங்கவிடப்படாமையால் கடந்த 30 வருடங்களுக்கு மேல் இப்பகுதியிலுள்ள கூரணிகளில் 80 சதவீதத்துக்கு மேல் விவசாயம் செய்யப்படுவதில்லை. இதுவே உண்மை நிலைவரமாகும்.

**அச்சுவேலி ஏ.ஏ.நாகா கல்லுடைக்கும் ஆலை.**

# மென்பந்து கிரிக்கெட் ஆட்டம் கடற்புயல்கள் அணி வெற்றி!

வட்டக்கச்சி,ஜூன்28

அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியினருக்கும் கடற்புயல்கள் அணியினருக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கடற்புயல்கள்அணியினர் 5ஓட்டங்களால் வெற்றிபெற்றனர்.

அளம்பில் இளந்தென்றல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தென்றல் அணியினர் முதலில் கடற்புயல்கள் அணியினரைத் துடுப்பெடுத்தாடப் பணித்தனர்.

விளையாட்டு

துடுப்பெடுத்தாடிய கடற்புயல்கள் அணியினர் 15 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து78 ஓட்டங்களைப் பெற்றனர்

இதில் மிராஜ் 24 ஓட்டங்களையும் ஜெயராஜ் 11 ஓட்டங்களையும் பெற்றனர். வேணு 3 விக்கெட்டுக்களையும் கிருபா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

79ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலக்குடன் களமிறங்கிய இளந்தென்றல் அணியினர் 14.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

தயா 26 ஓட்டங்களையும் வேணு 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

நவநீதன் 4விக்கெட்டுக்களையும் கண்ணன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் 5 ஓட்டங்களால் கடற்புயல்கள் அணி இளந்தென்றல் அணியைவென்றது. (203 - 405)

# ரெனிஸ் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.ரெனிஸ் கழகம் நடத்திய ரெனிஸ் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு-

* 11 வயதுப் பிரிவு ஒற்றையர் ஆட்டம் - சி.டானியல், றொ.டீன் ஒஸ்பேட்
* 11 வயதுப் பிரிவில் இரட்டையர் ஆட்டம் - றொ.டீன் ஒஸ்பேட் - ம.நிறோஜன், சி.டானியல் - ச.நிதர்சன்.
* 13 வயதுப் பிரிவு ஒற்றையர் ஆட்டம் - யோ.அமிர்தயன், தெ.துசைந்தன்
* 13 வயதுப் பிரிவு இரட்டையர் ஆட்டம் - யோ.அமிர்தயன் - ம.விந்தாரகன், ர.கௌதமன் - நா.கனஸ்லீன்.
* 15 வயதுப் பிரிவு ஒற்றையர் ஆட்டம் - ஆர்.பென்டில்கரன், ம.சஞ்சீவன்.
* 15 வயதுப் பிரிவு இரட்டையர் ஆட்டம் - ஆர்.பென்டில்கரன் - ச.றெஜினோல்ட், எம்.அஞ்சுதன் - ந.பெஞ்சமின்.
* 19 வயதுப் பிரிவு ஒன்றையர் ஆட்டம் - யோ.சதானந்தன், வி.ஜோயல்.
* 19 வயதுப் பிரிவு இரட்டையர் ஆட்டம் - யோ.சதானந்தன் - யோ.தினேஸ், வி.ஜோயல் - கே.டிசான்.
* திறந்தபோட்டி - பி.எல்.மோகன் - ஆர்.ரமேஸ், வி.டபிள்யூ.ஜெயனேசன் - ஆர்.றிக்கேஸ்.
* 11 வயதுப் பிரிவு பெண்கள் - ஒற்றையர் ஆட்டம் - க.நடாஷா, ஜே.ஜெயதிஸ்ரா

(203-190)

# முன்பள்ளி விளையாட்டு விழா

வட்டக்கச்சி, ஜூன்28

வட்டக்கச்சி மாயவனூர் சசி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் திருமதி இ.றஜிதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒலிம்பிக் சுடரை சிவிக் சென்ரர் கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கருத்துரைகளை மாயவனூர் கிராம அலுவலர் செ.ரூபசிங்கம், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் மு.குமாரசாமி ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (203-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவற்கிரி
ஸ்ரீ பூவடி ஞானவைரவர் தேவஸ்தான
புனராவர்த்தன பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேகம்

காலம்: நிகழும் மங்களகரமான விய வருஷம் ஆனிமாதம் 14 ஆம் நாள் (28.06.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் 10.25 மணிவரையிலான சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ த.விக்னராஜகுருக்கள் (தேவஸ்தான பிரதமகுரு)
அனைவரும் வருகை தந்து
இறையருள் பெறுவீராக!

நவற்கிரி, புத்தூர்.
ஆலயபிரதமகுரு,
நிர்வாகசபை.
(51592) (39)


# குருநாகலில் ஒருவருக்கு மரணதண்டனை விதிப்பு

குளியாப்பிட்டிய, ஜூன் 28

மனைவியைக் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதாகி விசாரிக் கப்பட்டு வந்த ஒருவருக்கு குருநாகல் நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது

இவ்வாறு மரண தண்டனை யைப் பெற்றுக்கொண்டவர், குரு நாகல் மாவட்டத்திலுள்ள கல்க முவ, பள்ளகொல்ல பகுதியைச் சேர்ந்த கே.எம்.பண்டா (வயது - 34) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மனைவி டி.எம்.சந்தி ரலதா என்பவரை கொலைசெய்தார் என்ற குற்றச்சாட் டின் பேரில் கைதாகி விசாரணைக்குட்படுத் திவந்த இவ ரது குற்றம் நிரூபிக்கப்பட்டமை யால் இந்தத் தண்டணை வழங்கப் பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-210)

# தங்காலையில் வங்கிக் கொள்ளை

காலி, ஜூன் 28

தங்காலை பொலீஸ் பிரிவிற் குட்பட்ட வலஸ்முல்லை கூட்டுறவு கிராமிய வங்கியில் கடந்த வெள்ளிக் கிழமையன்று பகல் 68 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது என வலஸ் முல்லை பொலீஸார் தெரிவித்தனர்.

ஆயுதபாணிகளாக வங்கியினுள் பிரவேசித்த இருவர், முகாமையாளரையும், ஏனைய ஊழியர்களை யும் அச்சுறுத்திவிட்டுப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறித் தப்பிச் சென் றுள்ளனர்.

வலஸ்முல்லை நகரில் பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தும் கொள்ளையர்கள் இக்கொள்ளையை வெற்றிகரமாக நடத்திச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக வலஸ்முல்லைப் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(க-169)

## பதுளை நகரில் சமாதானச் சத்தியாக்கிரகம்

ஹாலி எல, ஜூன் 28

நாட்டில் நடைபெறும் மனிதப் படு கொலைகளைக் கண்டித்து ஹாலி எல மக்கள் மன்றம் மாபெரும் சமாதான சத்தி யாக்கிரகப் போராட்டம் ஒன்றை நேற்று முன் தி னம் காலை பதுளை சேனா நாயக்கா பூங்காவில் நடத்தியது. இதில் சமயப் பெரி யார்கள், அரசியல் தலைவர்கள் மன்றும் சமாதான விரும் பிகள் எனப் பல் வேறு தரப்பி னரும் கலந்துகொண் டனர்.

(க - 180)

## வீரவிருதுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஜூன் 28

தேசிய வீரப் பொது மக்கள் விருதுக்கான விண்ணப்பம் தற்சமயம் கோரப் பட்டுள்ளது. பிறர் உயிரை பாதுகாப்பதற்கு தம் உயிரை பணயம் வைத்து செயற்பட்டவர்களுக்கு கௌரவம் அளிக்கும் முகமாக வீரப் பொதுமக்கள் மன்றம் இந்த விருதை ஆண்டு தோறும் வழங்கிவருகிறது.

2005ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான கால கட்டத்தில் செய்யப் பட்ட வீரதீரச் செயல்கள் குறித்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களுக்கும் விவரங்களுக்கும் 'வீரப் பொது மக்கள் மன்றம்' வலான பாணந்துறை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றம் அறிவித்துள்ளது.

(க-122)


வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




வெண்சந்தனம், மரமஞ்சள், நாகதாளி பட்டை,
கஸ்தூரி, மஞ்சள், செவ்வரளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின்
கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்களைச் சுற்றி
கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி
பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு,
சருமம் சுருங்குதல், வீங்குதல் போன்ற சரும நோய்களைப்
பூரணமாகக் குணப்படுத்தும்.
சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை தக்கி, சருமத்தை
சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA SRI LANKA AYY PRO NO: REGNO A/L 250
(சி.49263) (35)



IELTS

INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM,ESSENTIAL ENGLISH LANGUAGE EXAMINATION FOR HIGHER STUDIES, WORK OR MIGRATION PURPOSES IN U.K., AUSTRALIA, NEW ZELAND, CANADA, USA, ETC

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.
British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
முற்றிலும் புதிய நூல் கள். வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள். பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாட நெறிக்கும் British Council Colombo இன் நடைமுறை போன்றே, சனி, ஞாயிறு நாள்களில் வகுப்புகள் இரண்டுLevelகளில் நடைபெறும். அடிப்படையில் இருந்து கற்க விரும்புவோருக்கு STEP UPTO IELTS PROGRAMME, ஏனையவர்கட்கு ADVANCED EXAM-LEVEL PROGRAMME வகுப்புகள் 01.07.2006 இல் ஆரம்பமாகும். தனியாகவும் குழுவாகவும் வகுப்புகள் ஒழுங்கு செய்துதரப்படும்.

SURE RESULT OF BAND 8 OR BAND 9
CONTACT ORCALLOVERAT
BRITISH ÇOLLEGE OF ENGLISH
141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY.
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் நடுவில்)
T.P.: 0779934783
(சி.49841) (39)


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24 - 06 - 1948



ஆண்டவன் அடியில்
03 - 07 - 2000

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் செல்லத்துரை ஜெகதீஸ்வரன்**
*(மக்கள் வங்கி லிகிதர்)*

அன்பின் திருவுருவே, பார்போற்றும்
உத்தமனாய் வாழ்ந்தவரே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
நிலையில்லா வாழ்வினிலே நிம்மதியே இல்லையப்பா!
உங்கள் நினைவாலே வாடி நிலைகுலைந்து தவிக்கின்றோம்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

புதுவளவு,
ஏழாலை மேற்கு.

*உங்கள் நினைவுடன் வாழும்:*
**அன்பு மனைவி, மகன்.**

(51624) (39)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 - 05 - 1955



மறைவு
28 - 06 - 2004

**அமரர் கணபதிப்பிள்ளை இராசேந்திரம்** *(ராசு)*
(தனுசன் நகைத் தொழிலக உரிமையாளர்)

ஆண்டு இரண்டு போனதா? - அப்பா
ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்ப முடியவில்லை- நீங்கள்
இறைவனடி சேர்ந்தீரென்று!

வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம் முகத்தை?
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்!

**மனைவி, பிள்ளைகள்.**


*நிரந்தர முகவரி:*
4 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

*தற்காலிக முகவரி:*
இல.132, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(51620) (39)

# அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

*ஆண்டவன் படைப்பில்*
11 - 03 - 1931



*விதி செய் விபத்தில்*
17 - 05 - 2006

**அமரர் சீனிக்குட்டி இராசசேகரம்**
*(இளைப்பாறிய அதிபர்)*

அவர்களின் சிவபதப் பேறு குறித்த சபிண்டிகரணம் 30.06.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்க)

எமது அன்புக் குடும்பத் தலைவர் விபத்தில் காயம் அடைந்த இரவு நேரத்தில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல உதவிய அன்புள்ளங்களிற்கும் உயிரைக் காப்பாற்றும் நோக்கில் பாடு பட்ட மருத்துவ குழாத்திற்கும் பின்னர் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பற்பல உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம், பத்திரிகை, பிரசுரங்கள் மூலம் அனுதாபம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

**- குடும்பத்தினர்.**

(51618) (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் விடுதலையும் விடிவும் பெற உலக நாடுகள் துணை நிற்கவேண்டும்

## ஈழவேந்தன் எம்.பி. வேண்டுகோள்



யாழ்ப்பாணம்,ஜூன்28

ஈழத்தமிழ் மக்களுடைய அழிவை யொட்டி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இயங்குகின்ற உலக நாடுகள் உண்மை நிலையை உணர்ந்து ஈழத் தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளை மதிக்கவேண்டும். எம் இனம் விடுதலையும் விடிவும் காணத் துணைநிற்கவேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### துயிலும் இல்லங்கள் மீது தாக்குதல்

இவ்விடயம் தொடர்பாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழினத்தைக் காக்க தம் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி இறப்பை இறுக அணைத்த எம் மாவீரர்களின் துயிலும் இல்லங்களை சிங்கள இராணுவம் தாக்குவது தமிழர் இறப்பிலும் அமைதி காணமுடியாது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

20.06. 2006 இல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தையும் பின்பு 21.06.2006இல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மின்குமிழ்களை அடித்துச் சேதப்படுத்தியுள்ளது. அடுத்து 22.06.2006 இல் அண்ணல் காந்தியையும் விஞ்சுகின்ற அளவிற்கு அறவழிப்போராட்டத்தை நடத்தி அகிலத்தைக் கவர்ந்த தியாகத்தின் வடிவம் திலீபன் திருவுருவப் படத்தையும் தாக்கி சுக்குநூறாக்கியுள்ளது. இதுபோன்றே அதே நாளில் தீவகத்தில் சாட்டியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லக் கட்டடங்களையும் மின்குமிழ்களையும் அடித்து நொறுக்கிக் கடற்படை அட்டகாசம் செய்துள்ளது. இதே போன்றே கொடிகாமத்தில் உள்ள துயிலும் இல்லத்தின் களஞ்சிய அறையைச் சேதப்படுத்தி மின் குமிழ்களை அடித்து நொறுக்கி சிங்கள இராணுவம் தன் ஆணவப்போக்கை காட்டியுள்ளது.

### ஏவல் பேய்கள்

தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கின்ற சதிச்செயலில் - வெறிச்செயலில் அடுத்தடுத்த ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளும் அவற்றினால் ஏவப்பட்ட பேய்களான சிங்களப் படையினரும் வெறிகொண்டு தமிழரைப் பூண்டோடு அழிக்கும் கொடூரச் செயலோடு நிறைவடையாது, இச்சிங்கள வல்லாண்மையில் இருந்து எப்படியும் தமிழினத்தைக் காக்கவேண்டும் என்பதற்காகத் தம் உயிரை மாய்த்த மாவீரர் இல்லங்களையும் பெற்றோல் குண்டு வீசித் தாக்கி இருக்கும் சிங்கள வெறியாட்டம் மேலும் தொடர நாம் அனுமதிக்கமுடியுமா? இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டாமா? இந்நிலையிலும் தமிழன் பொறுமை காப்பானாயின் சூடு சொரணை அற்ற தமிழினம் என்று எம்மை உலகம் எள்ளி நகையாடாதா. எனவேதான், பொறுத்தது போதும் பொங்கியெழவேண்டும் என்ற நிலையில் சிங்கள இராணுவத்தின் அடாவடித் தனத்திற்கும் அட்டகாசத்திற்கும் முடிவுகட்ட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். 'குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் அவனுக்குத் தொடர்ந்து குட்டுபவனும் முட்டாள்'.

சுருங்கக் கூறின் ஈழத்தமிழ் மக்களின் எதிர்கால மையமாக விளங்கும் யாழ். பல்கலைக்கழகம் தன் பணியில் ஏற்றமுற நிறைவேற்ற நாம் விழிப்புடன் பணியாற்றுவோமாக.

### அறைகூவல்

அதேவேளையில், தமிழினம் தமிழீழம் காண விதைக்கப்பட்டவர்கள் தான் எம் மாவீரர்கள். அவர்கள் விதைக்கப்பட்டவர்களே அன்றி புதைக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களின் அமைதியான துயிலுக்கு ஆபத்து ஏற்படுத்த சிங்கள அரசும் அவர்களின் முப் படையும் முயலுமாயின் நாம் அவ்வெறிச் செயலை எப்படியும் முறியடித்தே தீருவோம். இதுவே நாம் சிங்கள அரசுக்கு விடுக்கின்ற அறைகூவலாகும். ஈழத்தமிழ் மக்களுடைய அழிவை ஒட்டி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இயங்குகின்ற உலக நாடுகள் இனிமேலாவது உண்மை நிலையை உணர்ந்து ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வேட்கை களை மதித்து எம் இனம் விடுதலையும் விடிவும் காணத் துணைநிற்கவேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

## மணல் அகழ்வால் வயல்களுக்கு ஆபத்து!

சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையினால் நாயன்மார்கட்டு, செம்மணிப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத் தலைவர் இ.மயில்வாகனம், கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பகுதியில் உள்ள வயல் நிலங்களில் உழவு இயந்திரங்கள் மூலம் சட்டவிரோத மண் அகழ்ந்து எடுத்துச்செல்லப்படுகிறது. இதனால், விவசாயிகள் தமது பிரதான நெல் உற்பத்திகளை மேற்கொள்ளமுடியாதுள்ளனர். அத்துடன், வயல் நிலங்களின் எல்லைகள் கூட அழிக்கப்படுகின்றன.

மணல் அள்ளப்படுவதால் கடல் நீர் உட்புகும் அபாயம் உள்ளது. இச்செயலை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஆவன செய்யவும் என்று கோரப்பட்டுள்ளது. (111)

## குளம் புனரமைப்பு

நயினாதீவு வடக்கு விவசாய சம்மேளனம் உலக உணவுத் திட்டத்தின்கீழ் நயினை நரிக்குளம் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. நாளொன்றிற்கு 110 நபர்கள் வீதம் 3 ஆயிரத்து 396 மனித வலுக்கள் மேற்படி குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் - வேலையில் இணைந்துள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் - விவசாய சம்மேளத்தின் தலைவர் தெரிவித்தார்.(111)

# கொள்கலனில் பெற்றோல் கிடையாது விவசாயிகளுக்குப் பெருஞ்சிரமம்

தென்மராட்சி,ஜூன்28

எரிபொருள் விநியோக நிலையங்கள் கொள்கலன்களில் பெற்றோல் நிரப்ப மறுத்பதால் விவசாயத் தேவைகளுக்குப் பெற்றோல் இல்லாது சிரமப்பட நேரிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கு எரிபொருள் பெறமுடியாது விவசாயிகள் அல்லற்படுகின்றனர்.

இயந்திரங்களின் பயன்பாட்டுக்கு மண்ணெண்ணெய் ஓரளவு கிடைக்கின்றது. ஆனாலும் இயந்திரத்தை முதலில் இயக்குவதற்கு பெற்றோல் அவசியமாக உள்ளது.

எரிபொருள் நிலையங்களில் போத்தல்களில் பெற்றோல் கொடுக்க மறுக்கின்றனர். இதனால் நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயப் பணிகளுக்கு நீர் இறைக்க முடியவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால், விவசாயப் பயிர்கள் அழியும் நிலை தோன்றியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (111)

# ஜனாதிபதிக்கு கெப்பிட்டிக்கொல்லாவையில் வரவேற்பு எப்படி இருந்தது?

கொழும்பு,ஜூன்28

கெப்பிட்டிக்கொல்லாவ குண்டுத்தாக்கு தலையடுத்து கிராமிய மட்டத்தில் அரசியல் நிலைமைகள் அரசுக்குப் பாதகமான ஒரு போக்கினை வெளிப்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

கொழும்பு 'சண்டே லீடர்' இது தொடர்பாக எழுதியுள்ள ஒரு விமர்சனக் கட்டுரையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

சம்பவம் நடந்து சில மணிநேரத்தில் ஜனாதிபதி ரா்ஜபக்ஷ தமது ஆலோசகர்களை அழைத்து கலந்துரையாடியதன் பின்னர் அச்சம்பவத்தின் எதிர்விளைவாக அரசுக்குப் பாதகமான பிரசாரங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் கெப்பிட்டிக்கொல்லாவைக்குத் தாமே நேரில் செல்வதென்று தீர்மானித்தார்.

ஜனாதிபதி கெப்பிட்டிக்கொல்லாவைக்கு விஜயம் செய்வதானால் அது ஊடகங்களில் முழுமையான பரப்புரை செய்யப்படவேண்டுமென்றும் இல்லையெனில் பாதிக்கப்பட்ட மக்களை ஜே.வி.பியினர் அரசுக்கு எதிராகப் பயன்படுத்திக்கொண்டு விடுவார்கள் என்றும் யோசனை கூறப்பட்டது.

இதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதன் பேரில் தகவல் திணைக்களம் உடனடியாக நடவடிக்கை எடுத்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அனுராதபுரத்துக்கும் அங்கிருந்த கெப்பிட்டிக்கொல்லாவைக்கும் விமானப் படை விமானங்கள் மூலம் கொண்டுசென்று சேர்த்தது. கெப்பிட்டிக்கொல்லாவ ஒரு மரண வீடு போல் அன்று காட்சியளித்தாலும் ஊடகவியலாளர் தகவல்களை உடனடியாகவே சேகரிக்கத் தொடங்கினார்கள். ஆனால், அவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் யாவும் செயற்படாமலிருந்தமை அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. விசாரித்தபோது ஜனாதிபதி கெப்பிட்டிக்கொல்லாவைக்கு வர இருப்பதால் அனுராதபுரத் தகவல் கோபுரத்திலிருந்து தற்காலிகமாகத் தொடர்புகள் தடை செய்யப்பட்டிருப்பதாக உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இச்செய்தி ஊடகவியலாளர்கள் மத்தியில் பரவியது. சம்பவத்தின்



விவரங்களை மக்களுக்கு அறிவிப்பதற்காகத் தாங்கள் கொண்டுவரப்படவில்லை, அவ்விடத்துக்கு ஜனாதிபதி வந்திருக்கிறார் என்பதைப் பரப்புரை செய்யவே கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

சிறிது நேரத்தில் அங்கு விஜயம் செய்த ஜனாதிபதிக்கு வித்தியாசமான வரவேற்பு காத்திருந்தது.

''இது தானா மஹிந்த சிந்தனை? எங்களுக்கு எங்கே இருக்கிறது பாதுகாப்பு? கௌரவத்துடனான உங்கள் சமாதானம் என்னவாயிற்று? செத்தவர்களின் பிணங்களைப் பார்க்கவா வந்தீர்கள்? மீண்டும் இங்குவர வேண்டாம், எ[illegible] மக்களிடமிரு[illegible] கள்தான் ஜனாதிபதியை வரவேற்றன.

இருந்தபோதிலும் ஜனாதிபதி அங்கிருந்து கெப்பிட்டிக்கொல்லாவ மருத்துவமனைக்குச் சென்றார். சவச்சாலைக்குச் செல்லும் வழியில் காத்திருந்த மக்கள் எங்கே எங்களுக்குப் பாதுகாப்பு? என்று கோஷமிட் டார்கள். தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்று ராஜபக்ஷ பதிலளித்தார். சவச்சாலையில் இருந்து ஜனாதிபதி வந்தபோது சிலர் அவரை நோக்கிச் சென்று ஜனாதிபதி அவர்களே உங்களுக்கு நாங்கள் வாக்களித்தோம், இதுதானா நீங்கள் எங்களுக்குத் தரும் 'வெகுமதி' இவ்வாறு எங்களுக்கு ஏன் செய்தீர்கள்? நாங்கள் கௌரவமான மக்கள் இவ்வாறு எங்களுக்கு ஏன் செய்தீர்கள்? என்றெல்லாம் கேட்கத் தொடங்கினார்கள்.

பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதியின் இ[illegible]மையை உணர்ந்து அவ[illegible]ருந்து அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

பின்னர் ஜனாதிபதி பொலீஸ் நிலையத்துக்குப் போகத் தீர்மானித்தார். ஆனால், அங்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அவர் கண்டார். கெப்பிட்டிக்கொல்லாவ நகரில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ரயர்களும் வீதியில் எரிக்கப்பட்டிருந்தது.

கோபமுற்றிருந்த ஜனாதிபதி இந்த ஆர்ப்பாட்டம் ஜே.வி.பியினரால்தான் நடத்தப்பட்டதா என்று கேட்டார். ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியினரும் பின்னணியிலிருந்து செயற்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி திஸநாயக்க, 'ஆம் சேர்' இவையெல்லாம் ஜே.வி.பியினரால் தான் நடத்தப்பட்டது என்று கூறினார். அங்கு நடந்த கூட்டத்தையடுத்து ஜனாதிபதி அனுராதபுரம் மருத்துவமனைக்குப் புறப்பட்டார். ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த ஜனாதிபதிக்காக காத்திருந்தார். அவ்விடம் சென்ற ஜனாதிபதி கெப்பிட்டிக்கொல்லாவையில் நீங்கள் எல்லாரும் நல்ல வேலை செய்திருக்கிறீர்கள்'' என்று கூறினார். அதிர்ச்சிக்குள்ளான லால் காந்த என்ன நடந்தது என்று கேட்டார். நடந்தவற்றை ஜனாதிபதி அவருக்கு விளக்கிக் கூறினார். பொலீஸார் அதனை உறுதிப்படுத்தியிருப்பதையும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவித்த எந்த சம்பவத்திலும் ஜே.வி.பி. பின்னணியில் இருக்கவில்லையென்றும், சரியாகத் தெரிந்துகொள்ளாமல் எவரையும் குற்றஞ்சாட்ட வேண்டாம் என்றும் மக்கள் தமது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார்கள் என்றும் கூறினார் - லால் காந்த.

நீங்கள் எப்பொழுதுமே தவறான தகவல்களை வைத்து முடிவெடுத்து பிரச்சினைகளுக்குள்ளாகுறீர்கள் என்று ஜே.வி.பி. உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு ஜனாதிபதி, சரி தவறான தகவல் கொடுத்தவர் யார் என்று நான் கவனிக்கிறேன். கோபம் கொள்ளாதீர்கள். இது அரசியல். நாங்களும் இப்படி செய்திருக்கிறோம் என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் - இவ்வாறு 'சண்டே லீடர்' எழுதியுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சாவகச்சேரி, இந்துக்கல்லூரிக்கு மிக அருகில் 1¼ பரப்புக் காணியும், தபால்நிலைய வீதியில் கடை கட்டக்கூடிய 2 பரப்புக் காணி யும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776660713 இல.221, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (51575)

R.L.L தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு:0712507828 (51644)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து வேண்டிய அளவில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49481)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 28.06.06 விநியோகிக்கப்படும். றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை, ரவி -சாவகச்சேரி, தாரகை - பருத்தித்துறை, றாஜ்ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, நெல்லியடி, றாஜீவ்- கால்நடை தீவன விற்பனை நிலையம், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, சுன்னாகம், உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். T.P.: 222 2867, 222 3529 (51514)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.07.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் ஆலடி உடுவில், சந்நதி பாம், தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி நல்லூர். (சி-49614)

## மணமகன் தேவை

யாழ்.றோ.க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயது எழுதுவினைஞராக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2901 மே/பா உதயன். (51643)

## வாடகைக்குத் தேவை

பெண் மருத்துவருக்கு கொக்குவில், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை பகுதிகளில் பொருத்தமான அனெக்ஸ்/அறை வாடகைக்கு தேவை. தொடர்பு: 0777-570131 (51626)

## வீடு வாடகைக்கு

Attached Bathroom, 6 Rooms கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 66, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (51639)

# சுயதொழில் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்28

சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையாக கருவாடு பதனிடும் தொழிலுக்கு இடம்பெயர்ந்தோர் நலன்காக்கும் அமைப்பு நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரைத்த உப்பினை உதவி அடிப்படையில் வழங்கியுள்ளது.

அண்மையில் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் ப.இயேசுதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி அமைப்பின் உதவித் திட்ட உத்தியோகஸ்தர்களான எஸ்.ராஜேந்திரா, எஸ்.ரஞ்சித் ஆகியோர் கலந்துகொண்டனர். (190)

## தமிழ் தட்டச்சாளர் தேவை

கணனி அறிவுடன் கூடிய தமிழ் தட்டச்சாளர் தேவை. பகுதி நேரமாகவும் கடமையாற்றலாம். 2006.07.02 ஆம் திகதி காலை 9 மணிக்கு நேரடியாக சந்திக்கவும்.

**க.சிவசுப்பிரமணியம்,**
**சட்டத்தரணி,**
**இல.86, பொற்பதி வீதி, கொக்குவில்.**
(51638) (39)

## தேவை

திருநெல்வேலி, கந்தர்மடம், பிறவுண்றோட் பகுதிகளில் 02 பரப்பிற்குட்பட்ட நல்ல நிலையில் உள்ள சாதாரண வீடுவளவு கொள்வனவு செய்வதற்கு தேவைப்படுகிறது. தொடர்பு:

**க.சிவசுப்பிரமணியம்,**
**சட்டத்தரணி,**
**இல.86, பொற்பதி வீதி, கொக்குவில்.**
(51637) (39)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## தொழில்நுட்ப அலுவலர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கட்டட நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்யக்கூடியவராகவும் BOQ, Estimate, Plan ஆகியவற்றைத் தயாரிக்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் அமையும் இப்பதவிக்கு இளைப்பாறிய தொழில்நுட்ப அலுலர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை *'தலைவர், சைவவித்தியாவிருத்திச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி'* என்ற முகவரிக்கு 10.07.2006 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**சைவவித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**
27.06.2006 (சி-49850)(21.15.45)

## நீங்காத் துயரில் நாமும் இணைகின்றோம்



அமரர் **ஞானப்பிரகாசம் வேதநாயகம்**
[ஓய்வுபெற்ற இலிகிதர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்]

பலாலியைப் பிறப்பிடமாகவும் மாலி சந்தியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஞானப்பிரகாசம் வேதநாயகம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கி.பரமதாஸ் குடும்பத்தினர்.**
மாலி சந்தி,
கரவெட்டி.
(சி/49849) (24.21.15.45)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

*வடக்கின் புகழ்பெற்ற பாடசாலைகளிலொன்றாகத் திகழ்வதும், சிறந்த புத்தி ஜீவிகளை உருவாக்கி, தமிழ் மண்ணுக்கு பெருமை சேர்க்கும் யாழ்.இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு நீண்டகாலமாக சேவையாற்றி வரும் ஆசிரியரும், கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தின் தலைவருமாகிய,*

**திரு.சி.கிருஷ்ணகுமார்**

அவர்கள் உபஅதிபராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு தேவஸ்தான நிர்வாக உறுப்பினர்கள் யாபேரும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தேவஸ்தான நிர்வாக உறுப்பினர்கள்.**
(51630) (26.15.45.21)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2006
A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**80% OFF**

| பாட நெறிகள் | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 1,400 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | 1,800 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 1,400 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 1,400 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 1,200 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 1,200 |
| Accounting Package | - 3 மாதம் | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 1,200 |
| MS Office | - 3 மாதம் | 750 |

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I(A) - 30/06/2006
Batch II(A) - 01/07/2006
Batch III(A) - 02/07/2006
Batch IV(A) - 03/07/2006

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 . 12 . 1936



இறப்பு 29 . 05 . 2006

## அமரர் மைக்கல் யேசுதாசன் (J.P.)

பண்புடன் அனைவருடனும் பழகிய
எம் குடும்பத் தலைவரே!
பாச மழை பொழிந்து எம்மை
அரவணைத்து மகிழ்ந்த தந்தையே!
பார் போற்ற வாழ்ந்து இடை நடுவில்
பிரிந்தது ஏன் ஐயா?
பிழை செய்தவரையும் மன்னிக்கும் மனது
கொண்ட எம் குலக்கொழுந்தே!

பெற்ற பிள்ளைகள் நல்வாழ்விற்கு உம்மையே
அர்ப்பணித்த எம் அப்பாவே!
புண்பட்ட மக்களின் மனங்கள் மகிழச்
செய்த உத்தமரே!
பூப்போன்ற நின் முகத்தை இனி எப்போ காண்போம் அப்பா!
பரமனின் நிழலில் நின் வாழ்வு நிலைக்க
எம் வேண்டுதல்கள்.

29.05.2006 அன்று அகாலமரணமடைந்த எம் குடும்பத் தலைவர்அமரர் மைக்கல் யேசுதாசன் அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (28.06.2006) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இன்று 28.06.2006 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்/நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி வேண்டுகின்றோம். அத்துடன் அன்று நடைபெறும் மதியபோசனநிகழ்விலும் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் அகால மரணச்செய்தி அறிந்து சகல வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*எமது குடும்பத்தலைவர் பிரிவால் வருந்தும்:*
**மனைவி (அருள்மணி),**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், [illegible]**

**கடற்கரை வீதி,**
**நாவாந்துறை,யாழ்ப்பாணம்.**
(51642) (39.21.15.45)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **ஞானப்பிரகாசம் வேதநாயகம்**
[ஓய்வுபெற்ற இலிகிதர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்]

பலாலியைப் பிறப்பிடமாகவும் மாலி சந்தியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஞானப்பிரகாசம் வேதநாயகம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.இளந்திரையன் (யான்சன்)**
புதுக்குடியிருப்பு.
(சி/49852) (24.21.15.45))

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 – 06 – 1927



இறப்பு 20 – 06 – 2004

*அமரர்*

# பொன்னையா பாக்கியம்

*திதி: 28.06.2006 ( புதன்கிழமை )*

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது எங்கள் துயரம்; நீங்காது உங்கள் நினைவு!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*
– குடும்பத்தினர்

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (51636)(21.15.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டி

# டோட்டி அடித்தார் 'பெனால்டி'; ஆஸியை வென்றது இத்தாலி!



கைசர்ஸ்லாட்டர்ன், ஜூன் 28

கடைசி கட்டத்தில் ''பெனால்டி'' வாய்ப்பில் பிரான்சஸ்கோ டோட்டி அற்புதக்கோல் அடிக்க, இத்தாலி அணி காலிறுதிக்குள் நுழைந்தது. அதிர்ஷ்டம் இல்லாத ஆஸ்திரேலியா பரிதாபமாக வெளியேறியது.

நேற்றுமுன்தினம் ஜெய்சர்ஸ்லாட்டர்னில் நடந்த 'நொக்-அவுட்' முறையிலான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் மூன்று முறை சம்பியனான இத்தாலி மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதின.

ஆரம்பத்தில் அனுபவம் இல்லாத ஆஸ்திரேலியா மிரட்டியது. ஆனாலும், போகப்போக இத்தாலியின் அதிரடி ஆரம்பமானது. ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் இத்தாலிய வீரர் லூகா டோனிக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. இவர் தலையால் பந்தை முட்ட, அதை ஆஸ்திரேலிய கோல் காப்பாளர் மார்க் ஸ்கவார்சர் துடிப்பாகத் தடுக்க வாய்ப்பு நழுவியது. அடுத்து ஆஸ்திரேலியாவின் தாக்குதல் ஆரம்பமானது. 30 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் ஸ்காட் சிப்பர்பீல்ட் 10 மீற்றர் தூரத்தில் இருந்து பந்தை அடிக்கிறார். காத்திருந்த இத்தாலி கோல் காப்பாளர் கியான்லியுகி பபான் அபாரமாகத் தடுத்து இரசிகர்களிடம் பாராட்டுப் பெற்றார். முதல் பாதியில் இரு அணிகளும் மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தின. நட்சத்திர இத்தாலி அணி ஜொலிக்காதது தான் ஏமாற்றம் தந்தது. முதல் பாதி முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இரண்டாவது பாதி தொடங்கியதும் இத்தாலிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 51ஆவது நிமிடத்தில் இந்த அணியின் நட்சத்திர வீரரான மார்க்கோ மாட்டராசி, ஆஸ்திரேலியாவின் மார்க்கோ பிரசியானோவை முரட்டுத்தனமாகத் தடுக்க, உடனடியாக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து 10 பேருடன் விளையாட வேண்டிய இக்கட்டான நிலைக்கு இத்தாலி தள்ளப்பட்டது. 10 பேராகக் குறைந்து போனதால், இத்தாலி தற்காப்பைத் தகர்த்து 58ஆவது நிமிடத்தில் மின்னல் வேகத்தில் முன்னேறினார் ஆஸ்திரேலியாவின் ஸ்காட் சிப்பர்பீல்ட். இவர் அடித்த பந்தை இத்தாலி கோல்காப்பாளர் கியான்லியுகி பபான் தடுத்துவிட்டார். பின்னர் 65ஆவது நிமிடத்தில் இத்தாலிக்குக் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பை ஆன்ட்ரியா பிர்லோ வீணாக்கினார். இப்படி இருஅணிகளும் பந்தைப் பரிமாற்றம் செய்வதும், பெனால்டிப் பகுதியை நெருங்குவதுமாக இருந்தன. ஆட்டத்தை முடிக்கும் திறன் இரு அணிகளிடமும் இல்லாததால் கோல் அடிக்க முடியவில்லை.

ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் இத்தாலியின் நட்சத்திர வீரரான பிரான்சஸ்கோ டோட்டி, டெல்பியரோவுக்குப் பதிலாகக் களமிறக்கப்பட்டார். 'ஸ்டாபேஜ்' நேரத்தில் இத்தாலியின் பாபியோ கிராசோ பந்தை எடுத்துக்கொண்டு பெனால்டி பகுதிக்குள் அதிவேகமாக சென்றார். அப்போது அவரை ஆஸ்திரேலியாவின் லூகாஸ் நீல் மடக்க, நடுவர் இத்தாலிக்கு 'பெனால்டி' வாய்ப்பு அளித்தார். இப்போது பந்தை அடிக்கிறார் பிரான்சஸ்கோ டோட்டி. எதிரில் ஆஸ்திரேலிய கோல்காப்பாளர் மார்க் ஸ்கவாசகர் மட்டும் நிற்கிறார். டோட்டி துல்லியமாக உதைத்த, பந்து வலைக்குள் செல்ல இத்தாலி 1-0 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது.

# இங்கிலாந்தின் 40 வருட கனவை போர்த்துக்கல் கலைத்துவிடுமா?

FIFA WORLD CUP GERMANY 2006

தொகுப்பு அதிரன்

ஜெல்சன்கிர்சன், ஜூன் 28

ஜூலை முதலாம் திகதி நடைபெறவுள்ள காலிறுதிப் ஆட்டத்தில், இங்கிலாந்து, போர்த்துக்கல் அணிகள் மோதுகின்றன. உலகக்கிண்ண வரலாற்றில் இல்லாத அளவில் வீரர்களுக்குள் தாக்குதல் நடந்த நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்று காலிறுதியில் நுழைந்துள்ளது போர்த்துக்கல். அதேபோன்ற ஆட்டத்தை காலிறுதியிலும் தொடர வாய்ப்புள்ளது என்பதால் இங்கிலாந்துக்கு பெரும் நெருக்கடி காத்திருக்கிறது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை 40 ஆண்டுகளுக்கு முன், 1966இல் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதன் பின்னர் இந்த அணிக்கு சோக கீதம்தான். 1970இல் காலிறுதி வரை முன்னேறியது. அடுத்த இரண்டு உலகக்கிண்ணத் தொடர்களில் விளையாடுவதற்குக் கூட தகுதி பெறவில்லை.

காலிறுதி ஆட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கிலாந்துக்கு ராசியில்லாத சுற்று என்றே கூற முடியும். இதற்கு முன் நடந்த 5 உலகக்கிண்ண தொடர்களில் காலிறுதி சுற்றிலேயே இங்கிலாந்தின் கதை முடிந்திருக்கிறது.

1966, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் காலிறுதியைத் தாண்டியது. 1990இல் நான்காவது இடம்தான் கிடைத்தது. எனவே, நீண்டகாலமாக, கிண்ணத்தைக் கைப்பற்றும் கனவில் இருக்கும் ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து அணி உள்ளது. ஆகவே, இம்முறை வாய்ப்பை நழுவவிடாமலிருக்க அந்த அணி முயற்சிகள் மேற் கொள்ளும்.

முதல் சுற்றில் நடந்த மூன்று ஆட்டங்களில் அதிர்ஷ்டவசமாகத்தான் இங்கிலாந்து இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது. '' நாங்கள் சரியாக விளையாடவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம்,'' என்கிறார் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ஆஸ்லே கோல்.

முதல் சுற்றில், பராகுவேக்கு எதிரான ஆட்டத்தில் 'சேம்சைட்' கோல் இங்கிலாந்துக்கு அதிர்ஷ்ட காற்றை திசை திருப்பி விட்டது. சாதாரண அணியான டிரினிடாட்டுக்கு எதிராக மட்டும் இந்த அணி 2 கோல் அடித்து வெற்றி பெற்றது. சுவீடனுக்கு எதிரான ஆட்டத்தில் தலா இரண்டு கோல்களுடன் ஆட்டத்தை சமன் செய்தது.

இரண்டாவது சுற்றில் ஒரு கோல் அடித்துத்தான் இந்த அணி காலிறுதிக்கு வந்திருக்கிறது. அரையிறுதிக்கு அணியை அழைத்து செல்ல வேண்டிய பொறுப்பு பெக்காம், ரூனி, ஆஸ்லே கோல் ஆகிய வீரர்களின் கையில்தான் இருக்கிறது.

வீரர் ஆஸ்லே கோல் ஈக்குவடோருக்கு எதிரான ஆட்டம் முடிந்த பின்னர், ரூனியின் திறமையைப் பற்றி கூறிய போது, 'ரூனியிடம் பந்துகளைப் பரிமாற்றம் செய்தால் அவர் சகாசம் செய்துவிடுவார். அவரிடம் பந்து சென்றால் அது கோல் ஆவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்கான சூழ்நிலையையும் உருவாக்கிவிடுவார்' என்றார்.

இந்தத் தொடரைச் சேர்த்து இதுவரை நடந்த 17 உலகக்கிண்ண ஆட்டங்களில் போர்த்துக்கல்லைப் பொறுத்தவரை 4 முறைதான் தகுதி பெற்றிருக்கிறது. இந்த அணி இதுவரை ஒருமுறை கூட கிண்ணத்தை வென்றது இல்லை.

1966இல் இங்கிலாந்து கிண்ணத்தை வென்றபோது, போர்த்துக்கல் அணி மூன்றாம் இடத்தைப் பிடித்தது. கலந்துகொண்ட மற்ற தொடர்களில் முதல் சுற்றிலேயே இந்த அணி வெளியேறிவிட்டது.

போர்த்துக்கல் அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்கள், இந்த அணியில் பெரிய எழுச்சி அலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முதல் சுற்றில், ஈரான், அங்கோலா மற்றும் மெக்சிக்கோவுக்கு எதிரான ஆட்டங்களிலும் இந்த அணி வெற்றி பெற்றது. நெதர்லாந்து அணிக்கு எதிரான ஆட்டம், புலிக்கும் சிங்கத்துக்கும் இடையிலான ஆட்டம் போல் அமைந்துவிட்டது. ஒழுக்கம் என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு ஆட்டம் வன்முறை களமாக மாறிவிட்டது.

இங்கிலாந்து ரசிகர்கள் அரங்கத்திலும் அதற்கு வெளியிலும் வெறித்தனமாக நடந்துகொண்டாலும் கூட, அந்நாட்டு வீரர்கள் அப்படியல்ல. களத்தில் நியாயமாக விளையாட நினைப்பவர்கள். ஆகவே, எதிரும் புதிருமான இரு அணிகளின் ஆட்டம் நிச்சயம் ரசிகர்களுக்கு விறுவிறுப்பை ஏற்படுத்தும்.


இன்னொரு வகையில் பார்த்தால், போர்த்துக்கல் அணி இங்கிலாந்துடன் மோதும்ஆட்டத்தில் நியாயமாக விளையாட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. காரணம் இந்த அணி வீரர்களும் மஞ்சள் அட்டை பெற்றுள்ளதால், இந்த ஆட்டத்திலும் மஞ்சள் அட்டை பெறும் பட்சத்தில் அரையிறுதியில் விளையாட முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். ஆகவே, இங்கிலாந்து அணிக்கு இணையாக விளையாட வேண்டிய நிலைக்கு போர்த்துக்கல் தள்ளப்படும். என்றாலும், பந்துகளை கோல் ஆக்குவதற்கு வீரர்கள் காட்டும் ஆக்ரோஷம் - கிளேடியேட்டர் சிங்கத்துடன் மோதும் உணர்ச்சியுடன் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நெதர்லாந்துக்கு எதிராக சிறப்பாக ஆடிய போர்த்துக்கல் வீரர் மனிசே. ஆட்டம் முடிந்த பின் அளித்த பேட்டியில்:-

''நான் மட்டும் நன்றாக விளையாடவில்லை, மொத்த அணியே நன்றாக விளையாடியது. எல்லாற்றையும் விட எனக்கு அணி நலனே பெரிது. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டம் கடுமையானதாகவே இருக்கும். அந்த அணி வீரர்கள் சரியான வியூகத்துடன் விளையாடுகிறார்கள். எங்களுடைய வெற்றிக்காக நாங்கள் எதையும் விட்டுக்கொடுப்போம்'' - என்றார்.




# உலகக்கிண்ண வரலாற்றில் உக்ரைனுக்கு அடித்த அதிர்ஷ்டம்



கொலோன், ஜூன் 28

உலகக்கிண்ண வரலாற்றில் முதன் முறையாக காலடி எடுத்து வைத்த உக்ரைன் கலக்கலாகக் காலிறுதிக்கு முன்னேறியது. 'பெனால்டி ஷூட் அவுட்' மூலம் உக்ரைன் அணி, சுவிற்ஸர்லாந்தை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. தொடர்ந்து மூன்று வாய்ப்புகளைத் தவறவிட்ட சுவிற்ஸர்லாந்து தொடரில் இருந்து பரிதாபமாக வெளியேறியது.

நேற்றுமுன்தினம் கொலோனில் நடந்த இரண்டாம் சுற்று ஆட்டத்தில் சுவிற்ஸர்லாந்து மற்றும் அறிமுக உக்ரைன் அணிகள் மோதின. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் உக்ரைனுக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. அணித் தலைவர் ஆன்ட்ரி ஷெவ்சென்கோ, அப்படியே பறந்து பந்தைத் தலையால் முட்டி வலைக்குள் தள்ளப் பார்த்தார். ஆனால், பந்து தரையில் தட்டி கோல் கம்பத்தில் பட்டு வெளியேற, அரிய வாய்ப்பு நழுவியது. அடுத்து 23ஆவது நிமிடத்தில் சுவிற்ஸர்லாந்துக்குத் தடையற்ற உதை மூலம் கோல் போடும் வாய்ப்புக் கிடைத்தது. 20 மீற்றர் தூரத்தில் இருந்து அலெக்சாண்டர் பிரெய் அடித்த பந்து, கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. அதை டிரன்கிளா பர்னட்டா மீண்டும் அடிக்க, பந்து கோல் கம்பத்தில் இருந்து விலகிச் செல்ல, வாய்ப்பு வீணானது. இப்படி இரு அணிகளும் கோல் கம்பத்திற்கே அடித்து வாய்ப்புகளைக் கோட்டை விட, முதல் பாதி முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இரண்டாவது பாதியில் வீரர்கள் முரட்டு ஆட்டத்துக்கு மாறினர். ஆனாலும் நடுவர் அடக்கி வாசித்தார். இதற்கு நடுவர்கள் அளவுக்கு அதிகமாக நிற அட்டைகள் காட்டுவதாக, சர்வதேச கால்பந்துக் கூட்டமைப்புத் தலைவர் [பிபா] செப் பிளாட்டர் அதிருப்தி தெரிவித்தமை காரணமாக இருக்கலாம். இவ்வாட்டத்தைப் பிளாட்டரும் காண வந்திருந்ததால், நடுவர் பெனிட்டோ வீரர்களிடம் நண்பர் போல நடந்து கொண்டார்.

உக்ரைன் அணித்தலைவர் ஷெவ்சென்கோ அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியும் பலன் கிடைக்கவில்லை. 60ஆவது நிமிடத்தில் தடையற்ற உதை வாய்ப்பை வீணாக்கிய இவர், 67ஆவது நிமிடத்தில் பெனால்டிப்பகுதிக்கு வெளியே இருந்து அசுர வேகத்தில் பந்தை அடித்தார். இம்முறையும் கோல் கம்பத்தில் பட்டு, பந்து பறந்துபோனது. மறுபக்கம் சுவிற்ஸர்லாந்தும் வாய்ப்புகளைக் கோட்டைவிட, இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து ஆட்டம் கூடுதல் நேரத்துக்குச் சென்றது.

இரண்டு பாதி கூடுதல் நேரத்திலும் கோல் அடிக்கப்படாததால், இந்த உலகக் கிண்ணத் தொடரில் முதன் முறையாக, 'பெனால்டி ஷூட் அவுட்' மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இப்போது கோல்காப்பாளர்கள் கையில் தான் வெற்றி இருந்தது. உக்ரைன் கோல் காப்பாளர் அலெக்சாண்டர் ஷோவ்கோவ்ஸ்கி அருமையாகத் தடுத்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார். சுவிற்ஸர்லாந்து சார்பில் மார்கோ ஸ்டலர், பெர்னட்டா, ரிக்கார்டோ கானபாஸ் வாய்ப்பைத் தவறவிட்டார். உக்ரைன் அணித்தலைவர் ஷெவ்சன்கோ தனது வாய்ப்பை கோட்டை விட்டபோதும், ஆர்டம் மிலவ்ஸ்கி, செர்கி ரிபரோவ், ஒலேக் குசோவ் பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து அணிக்கு வெற்றி தேடித் தந்தனர்.

இறுதியில் உக்ரைன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் சுவிற்ஸர்லாந்தை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

*புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை*

**சித்திவிநாயகர் தேவஸ்தான**

**துவஜாரோகண (கொடியேற்ற) விஞ்ஞாபனம்**

காலம்: 30.06.2006 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

*மகோஹ்சவ குரு :-*
"சித்தாந்த பண்டிதர்" கலாநிதி
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன்)

அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு
ஐங்கரனின் அருள் பெறுக.

**மு.செல்லப்பா**
*விழா உபயகாரர்.*

(51648)(32-19-14)

---

கணபதி துணை
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**கொக்குவில் மேற்கு சொர்ணவடலி**
**அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்திவிநாயகர் தேவஸ்தானம்**
**விய வருட திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்**

கொடியேற்றம்: நாளை (29.06.2006) வியாழக்கிழமை முற்பகல் 10மணி
தேர்த்திருவிழா: 09.07.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
தீர்த்தத்திருவிழா: 10.07.2006 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி
பூங்காவனத் திருவிழா: 11.07.2006 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி
வைரவர் பொங்கல்:12.07.2006 புதன்கிழமை மாலை4 மணி

*மஹோற்சவ குரு:* சிவப்பிரம்மஸ்ரீ
**சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் (ஆலய பிரதம குரு)**
*ஆலய குரு:*
**சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்.**

*சொர்ணவடலி,* **நிர்வாக சபையினரும்,**
*கொக்குவில் மேற்கு.* **உபயகாரர்களும்.**

(51650)(32-19-14)

*விளம்பர அனுசரணை:* **சந்திரன் ஸ்ரோர்ஸ்,**
*பூநாறி லேன், கொக்குவில் மேற்கு.*
**T.P.: 021 4591223**

---

care

## கேள்விப்பத்திரம் கோரல்

*நிவாரண அபிவிருத்திப்பணிகளில் ஈடுபட்டு வரும் **கெயார் சர்வதேசம், யாழ்ப்பாணம்** வல்வெட்டித்துறைப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றது. இவர்களுக்குத் தேவையான நீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க குழாய்க்கிணறுகளை அமைக்கவுள்ளது. இதற்குப் பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கும் இல.15, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.*

**விண்ணப்ப முடிவு திகதி: 07-07-2006**

நிர்வாக உத்தியோகத்தர்,
கெயார் சர்வதேசம், யாழ்ப்பாணம்.

*(ச/49854)(26-32-19-14)*

---

## மரண அறிவித்தல்



### ஞானப்பிரகாசம் வேதநாயகம்

**(ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன லிகிதர்)**

பலாலியைப் பிறப்பிடமாகவும் மாலிசந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் வேதநாயகம் 25.06.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - உஸ்தீனம் தம்பதியரின் அன்பு மருமகனும் சில்வீனின் அன்புக் கணவரும் மாகிறேற்றின் அன்புச் சகோதரனும் றீற்றம்மா, காலஞ்சென்ற ஜோசவ் பெனடிற் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வேதநாயம் (தொலைபேசி இயக்குநர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் சகலனும் டொண்பொஸ்கோ (லண்டன்), டெய்சி வனிதா (ஜேர்மனி), ஆன் விஜிதா (சுவிற்சர்லாந்து), கிங்ஸ்லிகுமார் (லண்டன்), ஜேன் ஜெயவதனா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சிகா (லண்டன்), பீற்றர் (ஜேர்மனி), செல்வராஜா (சுவிற்சர்லாந்து), ஜேன் விக்ரொறினா (லண்டன்), சந்திரன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் சுனீத்தா (ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), மமான்ஸ் (கட்டார்) ஆகியோரின் தாய் மாமனும் வலன்ரைன் (ஜேர்மனி), வெனான்சியஸ், டொறின் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும் திருமகள், அருள் ஆகியோரின் மாமனும் டிலூசியா டெபியானா, மரியலானா, கலிஸ்ரா, கெவின் வினுஜியா, சுவேதன், வின்சியா, திஷானா, ஆதிரை, ஆதவி, ஓவியா, ஒலிவியா, அகி, ரெறோமி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனைகள் இன்று (28.06.2006) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54, இராசாவின்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (51646)(32-19-14)

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

---

## விரிவுரைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவிருந்த விரிவுரைகள் யாவும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று பதிவாளர் தெரிவித்துள்ளார். (203)

## வேலணை மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

வேலணை மத்திய கல்லூரியில் கல்வி பயின்று இரண்டாம் தடவையாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

## அறநெறி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒலிப்பேழை, புத்தகம், தாளம் ஆகியவற்றை இதுவரை பெறாத அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலிகாம இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் கேட்டுள்ளார்.

## அர்ச்சகர்களுக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,ஜூன்28

இந்து கலாசார திணைக்களம் வழங்கவுள்ள அர்ச்சகர்களுக்கான விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோர் இன்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இந்து கலாசாரத் திணைக்கள அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளலாம். இதுவரையும் விண்ணப்பிக்காதோரும் இன்று விண்ணப்பப்படிவத்தை பெற்று பூர்த்தி செய்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜூன்28

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 16தினங்கள் நடைபெறும் இத் திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட்கிழமையும் இடம்பெறும். (173)

* * *

வடமராட்சி,ஜூன்28

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இப்பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட்கிழமையும் இடம்பெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுறும். (173)

* * *

நல்லூர்,ஜூன்28

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

அன்றையதினம் கிரியாரம்பம் இடம்பெறும். யாகாரம்பம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணிக்கும் எண்ணெய்க்காப்பு சாத்துதல் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மறுநாள் புதன்கிழமை வரையும் 6ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மகாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

* * *

நல்லூர்,ஜூன் 28

நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாஷேகக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. 13 ஆம் திகதி [illegible] கிரியைகள் நடைபெறும். (111)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
அபிவிருத்தி இணைப்பாளர்
திருமதி ம.அமிழ்தினி அவர்களின் அன்புத் தந்தை
**அம்பலவாணர் குணரத்தினம்**
அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்,
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.

(51647)(32-19-14)

---

## கண்ணீர் அஞ்சலி



பலாலியைப் பிறப்பிடமாகவும்
மாலிசந்தியை வதிவிடமாகவும்
கொண்ட
அமரர் **ஞானப்பிரகாசம் வேதநாயகம்**
காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தோம்.
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நெல்லியடி கிழக்கு,
மாலிசந்தி.

**திருமதி வைரமுத்து புஸ்பமலர் குடும்பத்தினர்,**
**திருமாறன் குடும்பத்தினர் (லண்டன்).**

(51649) (32-19-14)

---

## மரண அறிவித்தல்

### வைரமுத்து பாலகிருஷ்ணன்

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பாலகிருஷ்ணன் 26.06.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சித்தன்கேணியைச் சேர்ந்த அமரர் சோமசுந்தரம் - பகவதி தம்பதியரின் மருமகனும் வைரமுத்து - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லீலாவதி, நாகலிங்கம், சொர்ணம்மா, கனகரட்ணம் (EX.TO.R.D.A), காலஞ்சென்ற இராமகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் திருமதி விமலேந்திரன் தயாவதி, திருமதி ஆனந்தகுமாரசாமி தயாநிதி (ஆஸ்திரேலியா), திருமகள் (ஆஸ்திரேலியா),சபாநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*'கணேச வாசம்'* **திரு.கனகரத்தினம்** *(திருநெல்வேலி),*
*சித்தன்கேணி.* (51645)(32-19-14) **திரு.விமலேந்திரன்** *(சித்தன்கேணி).*

---



## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6685905 முதல் 6695664 வரை. சீட்டிழுப்பு இல. 248 திகதி 26-06-2006

### வெற்றி எண்கள்

4 9 1 3 2 3 | சுப்பர் எண் 23

ஜக்பொட் பரிசு ரூ. **12,265,525/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 12,265,525/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 5,000/= | 430,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 854 | 500/= | 427,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8564 | 50/= | 428,200/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 84852 | 10/= | 848,520/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 854 | 100/= | 85,400/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8486 | 20/= | 169,720/= |
| | | மொத்தம் | ரூ. 3,969,840/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,572,440/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 6686780-6-35 |
| கண்டி | 6688903-1-51 |
| கம்பஹா | 6693227-0-91 |
| மாத்தளை | 6688895-1-20 |
| பொலனறுவை | 6688042-7-06 |
| கேகாலை | 6695372-7-30 |
| களுத்துறை | 6694786-5-09 |
| புத்தளம் | 6687345-7-79 |

**இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்**
**ரூ. 12,503,600/-**

தொடர் இல. 7597675 க்கு மேற்பட்ட செமைத்சள நிற டிக்கட்டுகள் 2006 ஜுன் 29 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியுடன் கைகோக்க தயார் என்கிறார் தமிழ்ச்செல்வன்



ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நட்புக்கரம் நீட்ட விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' நாளேட்டுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இதனைத் தெரிவிக்கிறார்.

இலங்கையில் சிங்களப் படைகள் முன்னைய காலம் போல குழந்தைகள், பெண்கள் என்று பாரபட்சம் பாராது பொதுமக்களைக் கொன்று அழிக்கத் தொடங்கியுள்ளன. இதனால் உலககெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் குறிப்பாகத் தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்களிடம் அனுதாப உணர்வு எழுச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வேண் டிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

'தனிப்பட்ட நலன்கள் அடிப்படையில் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்கும் தி.மு.க அரசுக்கும் உறவுகள் நெருக்கமாக இருக்காது. ஆனால் மக்கள் நலனை வலுவாகக் கட்டியெழுப்பப்படும் போது நிச்சயமாக நாங்கள் நட்புக்கரம் நீட்டுவோம்" என்று தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

அமைதிப் பேச்சை நடத்த இந்தியா செல்லவும் தயார் என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதைப் பற்றிக் கேட்டபோது, "இந்தியா விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்திருக்கும் பட்சத்தில் நாங்கள் அங்கு செல்ல வாய்ப்பில்லை. ஆனால் நிலைமைகள்மாறும்" - என்றார்.

"சிங்கள அரசுக்கு ஆதரவு அளிப்பதை இந்தியா நிறுத்த வேண்டும். தங்களது அடிப்படை உரிமைக்காகப் போராடும் தமிழர்களின் கோரிக்கையைத் தார்மீக ரீதியாக இந்தியா ஆதரிக்க முடியாது என்று சொல்ல முடியாது. பல சந்தர்ப்பங்களில் இந்தியா உதவியுள்ளது. குறிப்பாக பங்களாதேஷ் போராட்டத்தை ஆதரித்து உதவியும் உள்ளது.

"இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவை வைத்துக் கொண்டு தான் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவது போல சிங்களப் பத்திரிகைகள் அறிக்கைகளை விடுத்துக் கொண்டு இருக்கின்றன.



"இந்திய அரசாங்கம் எங்கள் விடுதலைப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிப்பதுடன் எங்களுக்கு அதன் தார்மீக ஆதரவையும் வழங்க வேண்டும். இலங்கை அரசின் அட்டூழியங்களைக் கண்டிக்க வேண்டும். இதுவே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் தமிழ் மக்களின் விருப்பமுமாகும்.

"இலங்கை அரசாங்கத்தின் நயவஞ்சகச் செயலை இந்தியா உள்ளிட்ட அனைத்துலக சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். அந்தநாள் வந்தே தீரும். ஈழத்தமிழ் மக்களுக்கு கூடிய விரைவில் நல்லவழி பிறக்கும்" என்று சு.ப.தமிழ்ச்செல்வன் அந்தச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 2ஆவது நாளாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஆள் அடையாளங்களைத் தீவிரமாக விசாரணை செய்துள்ளதுடன், வீடுகள் தோறும் துருவித்துருவித் சோதனை செய்துள்ளனர்.

கந்தர்மடம் மற்றும் திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற பகுதிகளிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, நேற்றையதினம் சில முக்கிய வீதிகளில் இரு மருங்கிலும் நின்ற இராணு வத்தினர் வீதிகளால் பயணம்செய்தவர்களையும் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்களையும் கடுமையாகச் சோதனை செய்தனர். (117-15)

## வதிரி மேற்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்களையும், அப்பகுதியூடாக பயணித்த பொதுமக்களையும் மைதானத்தினுள் தடுத்து வைத்த படையினர் அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரணைக்கு உட்படுத்தினர்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்ற படையினர் அங்கு தேடுதல் நடத்தியதுடன் வீட்டில் இருந்தவர்களையும் மைதானத்திற்கு அழைத்துவந்தனர். பின்னர் அங்கு ஒன்று திரண்ட மக்கள் மத்தியில் படை அதிகாரி ஒருவர் குடாநாட்டில் தற்போது இடம் பெற்றுவரும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் குறித்து உரையாற்றினார்.

'பணிப்புறக்கணிப்பால் படையினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது பொதுமக்களுக்குத்தான் பல் வேறு பாதிப்புகள் ஏற்படும். எனவே, பொதுமக்கள் பணிப்புறக்கணிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்' என்று படைஅதிகாரி அங்கு தெரிவித்தார்.

படையினர் வீடுவீடாக தேடுதல் நடத்திய போது மின்சாரம் தடைப்பட்டிருந்தது என்றும் இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்றும் கூறப்பட்டது. (70)


## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ ஹோட்டலுக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1. உணவு பரிமாறுவோர்
2. சமையலறை வேலையாள்கள்
3. மேற்பார்வையாளர்

ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**விளம்பர இல. 2902 மே/பா, உதயன்.**
(51655)


## மரண அறிவித்தல்

### பண்டிதர் கா.செ.நடராசா M.A.

(ஓய்வுபெற்ற ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

இணுவையூர் பண்டிதர் கா.செ.நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அவர்கள் நேற்று (27.06.2006) செவ்வாய்க்கிழமை இந்தியாவின் தமிழகத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- இளையபிள்ளை தம்பதியரின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், செல்வரத்னம், மனோன்மணி, காலஞ்சென்ற சண்முகநாதன், ராசேஸ்வரி, லோகநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமரன் (சுபாஸ் கோல்டிங்ஸ் தலைவர், இந்தியா), கார்திகாயினி (ஆஸ்திரேலியா), குருபரன் (செய்தி முகாமையாளர், சூரியன் எவ்.எம்), காலஞ்சென்ற கார்த்திகேயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலா (இந்தியா),வைத்தியகலாநிதி கதிர்காமநாதன் (ஆஸ்திரேலியா), இளம்பூரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் பஞ்சாட்சரம், நாகையா, யோகநாதன், நகுலேஸ்வரி, இராஜலட்சுமி, அருளானந்தம், விவேகானந்தன், ஞானசௌந்தரி, பரமானந்தம் (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் கிருஸ்ணகாந், திவ்வியசௌத்ரி, திவ்வியலக்ஸ்மி, அமிர்தவர்ஸினி, மைத்ரேயி, துவாரகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2006) புதன் கிழமை அவரின் வேளச்சேரி இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குருபரன் (மகன்).
(சி-49855)

## பாரமி குலதுங்கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார். 1974 மார்ச் 21இல் இரண்டாம் லெப்ரி னன்ட்டாகப் பதவி உயர்வு பெற்றார். தொடர்ந்து 1979 இல் கப்டன் ஆகப் பதவி ஏற்ற இவர், 1983 இல் மேஜராகவும், 1990 இல் லெப்ரினன்ட் கேணல் ஆகவும், 1994 இல் கேணல் ஆகவும், 1995 இல் பிரிகேடியர் ஆகவும் பதவி வகித்துள்ளார்.

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இராணுவ கவசவாகனப் படைத் தளபதியாகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இவருடைய இந்நியமனம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (க)

## படைத்தளபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு ஜனாதிபதி உட்பட அரசியல் தலை வர்கள், படைத் துறை சார்ந்தோர் எனப் பலரும் நேரில் சென்று தளபதி குலதுங்கவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இன்று பொரளை - கனத்தை மயானத் தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் தள பதியின் உடலுக்கு இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரி வித்தன. (க)

## வாகரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

புலிகள் பதில் தாக்குதல் நடத்திய போது படையினரும், ஒட்டுக்குழுவினரும் தப்பி ஒடுவதற்கு வசதியாக, புலிகளின் நிலைகள் மீது கரடிக்குளம், மாங்கேணி இராணுவ முகாம்களில் இருந்து ஆட்டிலறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தயாமோகன் கூறினார்.

## தமிழ் விவசாயிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல் போயுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, குச்சவெளி பொலீஸ் பிரிவிலுள்ள பெரியகுளம் பகுதியிலிருக்கும் விறகுவெட்டியாகத் தொழில் புரியும் ஒருவரை கடந்த 25ஆம் திகதியிலிருந்து காணவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமல்போயுள்ளனர் எனக் கூறப்படும் இந்த நான்கு பேரினதும் விவரங்கள் வருமாறு:-

நல்லதம்பி கணேஸ்வரன் (வயது - 46), இரண்டு பிள்ளைகளின் தந்தையான பத்தக்குட்டி திரவியராஜா (வயது - 40), நான்கு பிள்ளைகளின் தந்தையான அம்பலவாணன் பிள்ளை சதாசிவம் (வயது - 45) மற்றும் அன்ரனி ஜோசப் (வயது - 51). இந்த விடயம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரட்ணசிங்கம் திருமலைப் பொலீஸாருக்கும், படையினருக்கும் முறைப்பாடு செய்துள்ளார். (க)


புதிய வெளியீடு



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த
திருட்டுப் பயலே
மனோகரா யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மட்டும்

ராஜா யாழ்ப்பாணம்
கரன், சாதனா நடித்த
கொக்கி
புதிய வெளியீடு
(சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30
ஜித்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி, விவேக் நடித்த
மது


## இலங்கையில் ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் பல தரப்பட்ட பிரமுகர்களுடனும், அரசியல்வாதிகளுடனும் பேச்சு நடத்தி, இலங்கை நிலைவரம் தொடர் பாக ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தார் என அறிய வருகின் றது.

இலங்கையில் இனப் போர் முழு அளவில் மீண்டும் மூளும் ஆபத்து இருப்பதாகவும் -

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக ஐ.நா. எடுக்கக் கூடிய - எடுக்க வேண்டிய - அவர, அவசியப் பணிகள் குறித்து அதில் விலாவாரியாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிகின்றது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னணியிலேயே இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை ஐ.நா. செயாளர் நாயகம் சந்தித்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின் போது ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கை விவகாரம் தொடர்பான ஐ.நா. நிலைப்பாடு குறித்து மூன்று அடிப்படை அம்சங்களை விளக்கினார் என்றும் தெரிகின்றது.

அவை -

✱ இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிடும் எண்ணமோ, ஐ.நா. படை அனுப்பும் திட்டமோ எதுவுமோ ஐ.நா.வுக்குக் கிடையாது. வழமையாக மோதல்கள், யுத்தங்கள் வெடிக்கும் இடங்களில் மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக ஐ.நா.வுக்குள்ள சிரத்தை இலங்கை விடயத்திலும் உள்ளது.

✱ இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக நோர்வே வழங்கும் அனுசரணைப் பணியை ஐ.நா. முற்றும் முழுதாக ஆதரிக்கிறது; அங்கீகரிக்கின்றது. அம் முயற்சிகளுக்கு முழு ஆதரவு தரக் காத்திருக்கின்றது.

✱ இலங்கையில் மனித உரிமை மீறல்கள், வன்முறைகள், படுகொலைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும், அத்தகைய சம்பவங்கள் குறித்து முழு அளவிலான நீதி, விசாரணை நடத்தி குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய வகையில் தண்டிக்க இலங்கை அரசு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என ஐ.நா. வற்புறுத்திக் கோருகின்றது.

- இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்தார் என அறியவந்தது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தை ஜெனீவாவில் சந்தித்த பின்னர் தற்போது நாடு திரும்பியிருக்கும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்த கருத்துகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து விளக்கியிருந்தார் என்றும் அறியவந்தது. (க)

## மரண அறிவித்தல்கள்

### க.சுப்பிரமணியம்

*(ஒய்வுபெற்ற ஆசிரியர். அல்லாரை (G.T.M.S)அ.த.க.பாடசாலை)*

மீசாலை மேற்கு, கேணியடி வீதியைச் சேர்ந்த க.சுப்பிரமணியம் அவர்கள் 26.06.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சேதுநாயகியின் (ஓய்வுபெற்ற நெசவாசிரியர்) அன்புக் கணவரும் சிவகுமார்(லண்டன்), சிவசுதன்(இந்தியா) ஆகியோரின் அப்புத் தந்தையும் சிவமதி(லண்டன்), ஜெயசுதா (இந்தியா) ஆகியோரின் மாமனாரும், சாம்பவி, விதுஷன், சோபிதா, கர்சிதா ஆகியோரின் பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கேணியடி வீதி,*
*மீசாலை மேற்கு,மீசாலை.* (51652)

தகவல்:
**மனைவி.**

### வேலுப்பிள்ளை கந்தசாமி (திரவியம்)



வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி (திரவியம்) அவர்கள் 26.06.2006 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசபூபதியின் அன்புக் கணவரும் ஜெயகௌரி (லீண்டன்), ஆனந்தகௌரி (கனடா), ஜெயக்குமார் (கனடா), சாந்தகௌரி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதீஸ்வரன் (லண்டன்), நந்தகுமார் (கனடா), ஜீவா (கனடா), விமலநாதன் (சுவிஸ்), இ.நவரத்தினராசா(உடுப்பிட்டி) ஆகியோரின் மாமனும் ஜெயந்தன், நிரோசன், சுயந்தன், தரணியா, சாயீசன், தாணியா, கிருஷாந், நர்த்தனா, தக்சனா, யாதவன், அச்சுதன், சொப்னாஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயரத்தினம்(பேபி), அருந்தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் உள்ள இல.42, மிட் கேஸ்ற் அவனியூ இல்லத்தில் 02.07.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கௌரி பவனம்'*
*வீரபத்திரர் கோயிலடி,*
*உடுப்பிட்டி.*
*தொ.பே.: 0044 2086649106.*
*077 6125325*

தகவல்:
**கௌரி குடும்பம்(மகன்),**
**செ.முரளி குடும்பம்(நண்பர்).**
(51658)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தலைவர்கள் இது தொடர்பாக இந்திய நீதிமன்றங்களில் குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இதனை மன்னிக்கும்படியோ, இது குறித்துத் தாராளமாக நடந்து கொள்ளும்படியோ கோருவது பயங்கரவாதம், வன்முறை, அரசியல் படுகொலை ஆகியவை பற்றிய கொள்கையை அங்கீகரிப்பது போலவே அமையும். ஆகவே, புலிகள் புரிந்த திடுக்கிடச் செய்யும் இந்தக் குற்றத்தை இந்திய மக்களால் மறக்கவே முடியாது.

**கேள்வி:-** கடைசியில் எப்படியும் நாம் முன்னோக்கி நகரத்தானே வேண்டும்? இந்தப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் ஓர் அரசியல் தீர்வு காண இலங்கை முயற்சிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா ஒருபுறம் கைக்கொள்ளும்போது ஏதோ ஒரு கட்டத்தில் இந்தத் துன்பியல் கொலை பின்தள்ளப்பட்டுத் தானேயாகவேண்டும்?

**பதில்:-** அப்படி அவர்களால் இலகுவாகக் கூறமுடியும். ஆனால், அவர்கள் தொடர்ந்தும் பயங்கரவாதம் மற்றும் வன்முறை அடிப்படையிலான அரசியலில்தானே நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள்? இந்தியாவைப் பொறுத்தவரை அது இலங்கையில் அமைதி, ஸ்திரம், ஐக்கியம் ஆகியவற்றையே விரும்புகின்றது.

அமைதி முயற்சியை நாங்கள் ஆதரிக்கிறோம். அது தடம்புரள்வது கவலைக்குரியது. நன்மையான எண்ணம் அங்கு நிலைக்கும் என நம்புகின்றோம். இலங்கையில் எல்லா விடயங்களும் ஜனநாயக, அமைதி வழியில் தீர்க்கப்படவேண்டும். வன்முறை, படுகொலைகள், இராணுவ வழிமுறைகள் மூலம் எந்த விடயத்துக்கும் தீர்வுகாணமுடியாது.

**கேள்வி:-** இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படவேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகின்ற நிலையில், இவ்விடயத்தில் இந்தியா அதிகளவில் நேரடிப் பங்களிப்பு வழங்கவேண்டும் எனப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கின்றார். இவ்விடயத்தில் இந்தியா நடுநிலையாளராக (mediator) பங்கு வகிக்க முடியுமா?

**பதில்:-** புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. உலகின் வேறு பல பெரிய நாடுகளிலும் அதற்கு எதிராகத் தடையுள்ளது. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியமும் தடையை அறிவித்துள்ளது.

வன்முறைகளைக் கைவிடுவதாக அறிவித்து பேச்சு மேசைக்குத் திரும்புவது புலிகளைப் பொறுத்தது.

**கேள்வி:-** ஆனால் இதில் முரண்பாடு உள்ளதே. பல கட்சிகள் - குறிப்பாக உங்கள் அரசில் இடம்பெற்றுள்ள தி.மு.க. போன்ற பெரிய கட்சிகள் - யாழ்ப்பாணத் தமிழர் என்ற விடயம் வரும்போது இந்தியாவின் அதிக செயல்பாடான பங்களிப்பை வற்புறுத்துகின்றார்களே?

**பதில்:-** அது வித்தியாசமான கேள்வி. இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - ஜனநாயக முறையில் - தீர்வு காணும் எந்த முயற்சிக்கும் நாங்கள் முழு ஆதரவு வழங்குகின்றோம். ஆனால், அதையும் இதையும் முடிச்சுப் போட்டுப் பார்க்காதீர்கள்.

**கேள்வி:-** கடைசியாக ஒரு கேள்வி. இலங்கைப் பிரச்சினை இவ்வளவு மோசமான வடிவம் எடுக்க முன்னர் ஆரம்பத்தில் புலிகளுக்கு இந்தியாவே பயிற்சியளித்தது என்ற சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. அதை பாலசிங்கமும் மீண்டும் சுட்டிக்காட்டியிருக்கின்றாரே?

**பதில்:-** இந்தக் குற்றச்சாட்டை சுமத்துபவர் யார்? அவர் புலிகளின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியா என்பது எங்களுக்குத் தெரியாது. என்றாலும் அது பொய். அத்தகைய கூற்றுக்குறித்து நான் கருத்து ஏதும் கூறத் தயாரில்லை.

- என்றார் ஆனந்த் சர்மா.

அவரின் பேட்டியை அடுத்து இதே கருத்தை 'த இந்து' ஆசிரியர் என்.ரி.ராம் தெரிவிப்பதும் ஒளிபரப்பாகியது.

ராஜீவ் கொலைச் சம்பவத்தைப் புலன் விசாரணை செய்த அதிகாரி கார்த்திகேயனின் கருத்தும் அதைத் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டது. (உ)

## பருத்தித்துறையில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் ஜூன்28

பருத்துத்துறையில் வல்லிபுர பரியாரியார் ஒழுங்கையில் நேற்று மாலை 5.30மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரின் உடலில் பல்வேறு இடங்களிலும் உராய்தல் காயங்கள் காணப்பட்டன.

குறிப்பிட்ட இளைஞர், இனந்தெரியாத ஆயுததாரிகளால் அப்பகுதியில் உள்ள ஒழுங்கைகள் வளவுகள் எனப்பல இடங்களுக்கும் துரத்திச் செல்லப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும்- உயிரிழந்த நபர் தமது பகுதிக்கு புதிதானவர் என்றும் - அப்பகுதி மக்கள் தரப்பில் கூறப்பட்டது. (15)

## மின்சாரம் தாக்கியதில் படையினருக்கு காயம்

யாழ்ப்பாணம் ஜூன்28

அராலி மத்தி வேலன்காடு பகுதியில் நேற்று காலை 10மணியளவில் மின்சாரம் தாக்கியதில் படை யினர் தரப்பில் சிலர் காயம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் உள்ள இராணுவக் காவலரணைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு அதற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது என்றும் - தவறுதலாக முட்கம்பி வேலியில் சிக்குண்ட படையினரே மின்தாக்கியதில் காயமடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

# அன்ரன் பாலசிங்கத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வே.பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

அதற்கு மேலதிகமாக இது "வரலாற்றில் - மறக்கமுடியாத ஒரு துன்பிய நிகழ்வு" என்று பாலசிங்கம் தெரிவித்ததோடு அந்தச் சம்பவத்துக்காகத் தாம் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிக்கிறார் எனவும் குறிப்பிட்டார். அது அப்படியே ஒளிபரப்பாகியது.

அதற்கு மேல் "இந்நிகழ்வை ஒரு தனி மனித கொலைச் சம்பவமாக அணுகுவது அல்லது பார்ப்பது தவறு. ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட்ட அரசியல் வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையில்தான் இச்சம்பவத்தைத் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும்." - என்று சாரப்பட அவர் தெரிவித்த கருத்துகள் அப்படியே வெட்டப்பட்டுவிட்டன.

அவற்றை ஒதுக்கிவிட்டு "15 ஆண்டுகளுக்குப்பின்னர் முதல் தடவையாக ராஜீவ் காந்தி கொலைக்கான பொறுப்பை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதற்கான மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள்" - என்ற சாரப்பட பாலா கூறாதவிடயத்தை ஒரு முன்னறிவிப்பாகக் கொடுத்து பாலாவின் நீண்ட ஒரு மணிநேரப் பேட்டியில் ஓரிரு நிமிட வார்த்தைகளை ஒளிபரப்பி, ராஜீவ் கொலைக்குற்றத்தைப் புலிகள் அப்படியே ஏற்றுக்கொண்டனர் என்ற மாயையை உருவாக்கும் விதத்தில் 'திருகுதாளம்' பண்ணி செய்தி வெளியிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தியச் செய்தி நிறுவனத்தில் ஞாயிற்றுக்கிழமை பதிவுசெய்யப்பட்ட மேற்படி பேட்டியின் முக்கிய பகுதிகள் புதுடில்லியில் வார்த்தைக்கு வார்த்தை அலசி ஆராயப்பட்ட பின்னர், அதில் சாதகமான பகுதிகளை வெட்டி எடுத்து ஒளிபரப்ப ஏற்பாடுசெய்யப்பட்டதோடு, அதற்கு இந்திய அரசுத் தரப்பில் பதிலடி தரவும் ஆயத்தம் செய்யப்பட்டது.

திங்களும், செவ்வாய் பகலும் தயாரிப்பு வேலைகள் புதுடில்லியில் நடந்த பின்னர் இந்தியத் தரப்புக்குச் சாதகமான விதத்தில் 'உப்புப் புளி சேர்த்து' அது வெளியிடப்பட்டது. அந்த வகையில் சர்வதேச பிரசாரமும் செய்யப்பட்டது.

பாலாவின் முழுப்பேட்டியும் சில தினங்கள் கழித்து முழுமையாகப் பிரசுமாகும் என்ற சமாதானம் பாலாவுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

"ராஜீவ் கொலை ஒரு வரலாற்றில் மறக்க முடியாத துன்பியல் நிகழ்வு. அதற்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம். பழையவற்றை மறந்துவிட்டுப் புதிய அணுகு முறையில் விடயங்களைக் கையாள இந்தியாவின் சமிக்ஞைகளை எதிர்பார்க்கின்றோம்" - என்று பாலா சொன்ன கருத்துகள் -

"பதினைந்து ஆண்டுகளின் பின்னர் ராஜீவ் கொலைக்கான பொறுப்பை புலிகள் முதற்தடவையாகப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்காக இந்தியாவினதும், இந்திய மக்களினதும் மன்னிப்பை அவர்கள் கோருகிறார்கள்" - என்ற பீடிகை அறிவிப்போடு ஒளி பரப்பியதன் மூலம் இவ் விடயத்தை வேண்டுமென்றே திரிவுபடுத்திக் குழப் பியிருக்கிறது என்.டிரி.வி. எனத் தமிழர் தரப் பில் கடுமையான குற்றச் சாட்டுத் தெரிவிக் கப்படுகின்றது. (உ)

# ராஜீவ் கொலைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய இராணுவத்துடன் சுமார் இரண்டு வருட காலம் நாம் போர் செய்தோம். இறுதியாக இலங்கை அரசுத்தரப்புடன் பேச்சு நடத்தினோம். அதன் மூலம் இந்தியப்படைகளை வெளியேற்ற வழிசெய்தோம். அதைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலை இடம்பெற்றது.

அது வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு துன்பியல் நிகழ்வு. அதற்காக நாம் வருந்துகிறோம்.

இந்தக் கடந்தகால சம்பவங்களை மறந்து, விடயங்களை தாராள மனப்பான்மையோடு புதிய வடிவத்தில் அணுகுமாறு இந்திய அரசையும், இந்திய மக்களையும் நாம் வேண்டுகின்றோம்.

சரித்திரத்தில் முக்கியமான ஒரு காலகட்டத்தில் இந்தியா எங்களது போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கிப் பயிற்சிகளை அளித்தது. - அது எமது மக்களை அரச அடக்குமுறையிலிருந்து பாதுகாப்பதற்காக. ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்கல்ல. தமிழர்கள் தங்களைத் தாங்கள் பாதுகாத்துக்கொள்வதற்காக அப்படிச் செய்யப்பட்டது.

1983 இற்கும் 1987 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை விடயத்தில் இந்தியத் தலையீடு இருந்தது. அவ்வேளையில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்தச் சமயத்தில்தான் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஓர் அரசில் தீர்வு காணப்படவேண்டும் என இந்தியா கருதியது.

இந்தப் பதினைந்து வருட காலமாக இந் தியா இலங்கை விடயத்தில் பட்டும் படாமலும் நடந்துகொள்ளும் அமைதி நிலைமையைப் பேணியது. இப்போது மீண்டும் அங்கு போரும், வன்முறையும் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது. ஆகவே, இந்தியா அதை வெறுமனே பார்த்திருக்க முடியாது. புதிய சவால்களை அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தனது அயல் நாடு தொடர்பாக புதிய வெளியுறவுக் கொள்கையை அது வகுத்துப் பின்பற்ற வேண்டியிருக்கும். அது விடயத்தில் புலிகளுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு மிக முக்கிய அம்சமாகவும் இருக்கும்.

இந்தியா சாதகமாக சமிக்ஞை தருமானால் இந்தியாவுடன் புதிய புரிந்துணர்வை - நல்லுறவை - கட்டியெழுப்ப நாம் தயாராக இருக்கிறோம். இந்தியாவின் பூகோள, அரசியல் நலன்களுக்கு மாறாக எதையும் - எந்தச் செயலையும் - நாம் முன்னெடுக்கமாட்டோம் என்ற வாக்குறுதியை நாம் ஏற்கனவே வழங்கியிருக்கின்றோம். எனவே, இந்தியாவே இது குறித்துத் தீர்மானிக்க வேண்டும்.

எனவே, கடந்த காலத்தை ஒருபுறம் தள்ளிவிட்டுப் புதிய அணுகுமுறை ஒன்று முன்னெடுக்கப்படுமானால் இந்தப் பிணக்கு தீர்வு காணும் விடயத்தில் இந்தியா சாதகமாக - தீவிரமாக - பங்கெடுக்கும் வாய்ப்பு நிலை ஏற்படும்.


**Diploma in Video Editing**
**#Premiere #Movie Capture #Photoshop #Cool 3D #Movie Cutting & Converting**
50% சலுகைக்கட்டணம் 01-07-2006 முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
*324, Palaly Road, Jaffna.* *Supported by UNDP/JRRP*


## மரண அறிவித்தல்

### வயிரவநாதர் குணசேகரம்



தம்மளை, அளவெட்டி மேற்கைச் சேர்ந்த வயிரவநாதர் குணசேகரம் (குணம்) அவர்கள் 26.06.2006 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கிறிஸ்ணதேவியின் அன்புக் கணவரும் ஜெயசுதன்(ஆஞ்சநேய கோயில் உதவியாளர்), ஜெயதரா, ஜெயதர்சினி, ஜெயகுணசீலன், ஜெயவனஜா, துசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாயகி, ஜெயமோகன், ஜெயகேந்திரன், தேவி, துவாரகன் ஆகியோரின் சகோதரரும் சிவகுமாரின் அன்பு மாமனும் பிரியங்காவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.06.2006)புதன்கிழமை முற்பகல்10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுதன்(மகன்).**
*தம்மளை, அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.* (51661)


**SPOKEN ENGLISH**
BY: BRITTO
**புதிய பிரிவு ஆரம்பம்: 29.06.2006**
காலை 7.30 வியாழன்
செவ்வாய்/வியாழன் வகுப்புகள்
இடம்: கொக்குவில்
(ஞானபண்டித வித்தியாலயம் அருகில்)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சண்முகராசா (அக்கம்மா ராசன்)

**(நாராயணன் ஹாட்வெயர் ஊழியர் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகராசா அவர்கள் நேற்று (27.06.2006) செவ்வாய்க்கிழமை தாண்டிக்குளத்தில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சரசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணமணியின்(ராதா) அன்புக் கணவரும் கிரிஜா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற புஸ்பராணி, கனகசூரியன் (ஸ்ரீமுருகன் களஞ்சிய ஊழியர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தியாகராசா, புஸ்பராணி, நாகராசா(கனடா), சிவரஞ்சன், தனநாயகி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2006)புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**
**வள்ளியம்மை (மாமி).**
*முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை,*
*கருங்காலி,காரைநகர்.* (51672)


எம்மிடம்
மொபிற்றல் **G.S.M 350/-**
மொபிற்றல் **G.S.M 1000/-**
மொபிற்றல் **G.S.M** சிம் காட்
**HAPPY MOBILEE**
எல்லா வகையான மொபிற்றல் காட்டுகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(கொள்வனவுக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்)
**ஹப்பி மொபையில்**
(யாழ். மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்) பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel.&Fax No.:021 2263287, 0777 745394


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org